க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொருள் ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. 192 ௵ மார்ச்௴ இதழ் 7.

தெய்வ வழிபாடு.

"யானெனல் காணேன் பூரண நிறைவில் யாதினு மிருந்தபே ரொளிநீ
தானென நிற்குஞ் சமத்துற வென்னைத் தன்னவ னுக்கவுந் தகுங்காண்
வானென வயங்கி யொன்றிரண் டென்னு மார்க்கமா நெறிதந்து மாறுந்
தேனென ருசித்து ளன்பரைக் கலந்த செல்வமே சிற்பர சிவமே"

பாண்டியநாடும், நாய்க்க அரசர்களும்.

(முன்றொடர்ச்சி.)

2. பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் (1563—1573)

விஸ்வநாத நாய்க்கர் இறந்ததும், அவர் குமாரரான பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர், 1563-A. D. ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். 1565-ம் ஆண்டில் விஜயநகர சமஸ்தானத்தின் மீது மகமதியர் படையெடுத்து வருவதை யறிந்து விஜயநகரத்திற் குதவியாய், தளவாய் அரியநாத முதலியார் சென்றனர். விஜயநகரம் சேனை தலைக்கோட்டையில் மகமதியரால் தோற்கடிக்கப்பட்டதோடு, விஜயநகரமும் பாழாக்கப்பட்டு, அதன் அரசன் ராம் ராஜனும் உயிரிழந்தான். இவ்வேதுவால் விஜயநகரத்திற்கு உட்பட்ட மைசூர் ராஜ்யம் ஸ்ரீரங்கப்பட்டணத் தலைவனுக்கும், தஞ்சாவூர் வீரராகவ நாய்க்கருக்கும், மதுரை பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கருக்கும் ஸ்வாதீனமாயின.

அந்நாளில் தும்பிச்சிநாய்க்கன் என்னும் ஒரு பாளையக்காரன் பெரிய சேனையைச் சேகரித்துக் கொண்டு பாண்டிய நாட்டிலுள்ள பல இடங்களைப் பிடித்துக் கொண்டதோடு, பரமகுடியையும் பிடித்துக்கொண்டு; அதில் தனக்கென்று ஒரு கோட்டையுங் கட்டிக் கொண்டான்.

பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் சேனையோடு சென்று, சண்டை செய்து அவனைக் கொன்று, அவன் கைபற்றிய நாடுகளை யெல்லாம் பிடித்துக்கொண்டார்.

ஆனால் தப்பிச்சி நாய்க்கனுடைய முதல் தாரப் பிள்ளையும், இரண்டாந்தாரப் பிள்ளையும் ஒன்றுசேர்ந்து பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் காலில் விழுந்து மன்னிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் மனம் இரங்கி, அவர்களுக்கு பரமகுடிக் கோட்டைக் காவலுங் கொடுத்து, பரம்பூர் என்னும் பட்டணத்தையும் அதைச் சார்ந்த கிராமங்களையுங் கொடுத்து ஒரு சிறிய பாளையப்பட்டாக்கினார். மற்றவைகளை தன்னாட்டோடு சேர்த்துக் கொண்டார். அவர் பாளையங்கோட்டைக்குக் கிழக்கில், தன் பெயரால் கிருஷ்ணாபுரம் என்னும் ஒரு பட்டணத்தையும், திருநெல்வேலிக்கு மேற்கே கடையம் கிருஷ்ணாபுரம் என்னும் ஒரு பட்டணத்தையும் உண்டாக்கி, அவற்றில் சிவன் கோயில், விஷ்ணுகோயில், தெப்பகுளம் அக்கிராரம் முதலியவைகளையுங் கட்டி முடித்தார். இவ்வாறு செங்கோல் செலுத்திவந்து 1573-ல் பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் இறந்தார்.

3. பெரிய வீரப்ப நாய்க்கர்.
(1573—1595)

1573-வருஷத்தில் பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் குமாரர் பெரிய வீரப்ப நாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். இவர்காலத்தில் மாவலிவண்ணன் என்பான் மானாமதுரையிலும், காளையார் கோவிலிலும் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு, பாண்டிய நாட்டின் சில பாகங்களையாண்டுவந்தான். ஆனால் பெரிய வீரப்ப நாய்க்கர் மாவலிவண்ணனை சிக்ஷித்து அவன் வசமுள்ள நாடுகளைக் கைப்பற்றி, தனது நாட்டோடு சேர்த்துக்கொண்டதோடு, திருச்சினாப்பள்ளிக்கு தெற்கில் ஒரு கோட்டையும், சிதம்பர ஆலயத்தின் சுத்து மதிலும், சில அக்கிராரங்களும் கட்டி முடித்தார். 1595-வருஷத்தில் இறந்து விட்டார்.

4. விஸ்வப்ப நாய்க்கர்
குமார கிஷ்டப்ப நாய்க்கர்
(1595—1602)

பெரிய வீரப்ப நாய்க்கருக்கு விஸ்வப்ப நாய்க்கர், குமார கிஷ்டப்ப நாய்க்கர், கஸ்தூரி ரங்கப்ப நாய்க்கர் என மூன்று குமாரருண்டு. அவர்களில் விஸ்வப்ப நாய்க்கரும், குமார கிஷ்டப்ப நாய்க்கரும் ஏழு வருடம் ஆண்டார்கள். இவர்களுக்குப் பிறகு குமார கிஷ்டப்ப நாய்க்கர் மகன் முத்து கிஷ்டப்ப நாய்க்கர் பட்டத்துக்கு வந்தார்.

5. முத்து கிஷ்டப்ப நாய்க்கர்.
(1602—1609)

முத்து கிஷ்டப்ப நாய்க்கர் பட்டத்துக்கு வந்ததும், அவர் சிற்றப்பன் கஸ்தூரி ரங்கப்ப நாய்க்கர் மதுரை ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டார். அப்படி அபகரித்த கஸ்தூரி ரங்கப்ப நாய்க்கரை பட்டத்துக்கு வந்த ஒருவாரத்துக்குள் கொலை செய்யப்பட்டது. பிறகு முத்து கிஷ்டப்ப நாய்க்கர் சந்ததி முறைப்படி பட்டத்துக்கு வந்தார். இவர் மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் மத்தியில் முத்து கிஷ்ணாபுரம் என்ற ஒரு ஊரை உண்டாக்கியும், சயத்தாத்தில் முத்து கிஷ்ணேஸ்வரர் என்ற ஒரு சிவன் கோயிலை கட்டியும் முடித்தார். இவர் காலத்திலேயே சேது சமஸ்தானம் உண்டாகியது.

"During his reign the establishment of the kingdom of the Sethopathi took place, in the following manner: that is to say, the first person to whom the country was given, was named Udiyan-Sethopathi. At that time the whole of the country around Ramiseram was in an anarchical state; each town having its fortress, and paying no tax or tribute whatsoever: in every direction waste forest-like lands appeared; rapine also prevailed; and the people bearing presents sent by the king to the temple at Ramiseram, were scattered on the way towards the isthmus named Sethu, and the temple itself; when, being thus divided, what they carried was forcibly taken from them as spoils, and the bearers of the same were killed. At that time the chief

guru (or spiritual adviser) of Mutthu-Kistnapa-Naicker, who was invested with the title of kartarcal (or lord), had occasion to go to Ramiseram; when the chief man of the village of Pugalur, who was named Udiyan escorted the chief guru safe to Ramiseram, without allowing him to suffer any insult or molestation by the way; and in like manner, also safely conducted him back again to Madura. Being greatly pleased with this attention, the chief guru introduced Ud'yan to the king Mutthu-Kistnapa-Naicker, procuring an interview, praising him as a skilful guide and safe guard on the road to Sethu; and in consequence Udiyan received a grant of certain peoble and lands, with villages, as also an honorary dress and various ornaments as presents: on being dismissed, he returned to pugalur; and there built a fort, assembled some forces and, by their aid, subdued and took possession of all the anarchical and disorderly country, reducing the inhabitants under his own dominion. He also collected a considerable sum of money in this country, in the way of taxes; and bringing the same to tne king, Mutthu-Kistnapa-Naicker, delivered it over to him. The king being very much gratified with this proceeding, gave him an unrestricted grant for additional people; instructed him to see the forest-lands, which yielded on revenue, cleared and cultivated; and wrote letters to the people, commanding their submission to his viceroy. According to this ordinance; the latter, when he returned, assembled additional forces, and took possession of a greater tract of country; the revenue arising from which he appropriated in part to his own and his people's expenses, and sent the remainder, or surplus, to the king. On this the king, being greatly pleased, sent for him, and invested him with the title of Sethopathi, as Ubiyan Sethopathi, (or Udiyan the chief of Sethu); bestowing on him elephants and horses, with vestments and ornaments; and also gave him some banners, er ensigns of dignity; and in Mdaura, had him consecrated to his viceroyalty, by sprinkling of the water of the Ganges: he then gave him audience of leave.

After this Udiyan-Sethopathi built a mud fort at Ramanatha-puram (Ramnad) and ruled in the fashion of a king. On his decease, his principality descendedto his son, named Kuttan-Sethopathi, who subdued to himself vadaku-vettakai, Kaliyar-kovil, Patta-mangala- nadu, with the whole circumjacent country; and carried the surplus amount of taxes to the palace (at Madura.)" vide, william Taylor's Orientalt historical Manuscripas, vol. II, p. 27.

இவருடைய ஆளுகையில் பின் கூறும் காரணத்தைக் கொண்டு சேதுபதியை ஏற்படுத்தப்பட்டது. இராமேஸ்வரத்திற்குப் போகும் மார்க்கங்களி லெல்லாம், யாதொரு வரும்படியில்லாது, உதவியற்றக் காடால் மூடப்பட்டிருந்ததோடு, அப்பாகத்தில் சொள்ளையும், கொலையும் சகஜமாக நடந்துக்கொண்டு வந்தது. முத்து கிஷ்டப்ப நாய்க்கருடைய குருவு இராமேஸ்வரம் போக நேர்ந்தது. உடையான் என்னும் பெயரினை வாய்ந்த புகலூர் கிராமத்திலுள்ள ஒரு முக்கியஸ்தன், குருவோடு தொடர்ந்து சென்று, அவருக்குப் போகும் பாதையில் யாதொரு தீங்கும் நேரிடா வண்ணம் பாதுகாத்துக் கொண்டுபோய் இராமேஸ்வரஞ் சேர்த்து, அவ்வாறுக்கவே மதுரைக்குக்கொண்டு

வந்தும் சேர்ந்தான். அவனது ஆற்றலைக்கண்டு குருவு சந்தோஷப் பட்டு, அவன் தன்மையை அரசனிடந் தெரிவித்து அறிமுகஞ் செய்து வைத்தார். அரசன் உடையானுக்கு சேதுவுக்கு போகும் பாதைக்கு ஒரு காவல்காரனா யிருக்கும் அதிகாரத்தைக் கொடுத்து, சில வெகுமானங்களுங் கொடுத்தனுப்பினார். உடையான் என்பவன் அதிகார வெகுமானங்களைப் பெற்றுக் கொண்டு, தனதூராகிய புகலூருக்குச் சென்று, ஒரு மண்கோட்டையைக் கட்டிக் கொண்டு, சில் சேனைகளோடு, தனது அதிகாரத்தைச் செலுத்தி குடிகளது குழப்பதை யடக்கி, வரிவாய்தாக்களை வசூலித்து, முத்து கிஷ்டப்ப நாய்க்கருக் கனுப்பினான். அவர் சந்தோஷப்பட்டு இன்னும் சில விருதுகளையும், சேனைகளையுங் கொடுத்து காடுகளைச் சீர்திருத்தி வரி வசூலிக்கும்படியாகவும், தமது பிரதிநிதியின் கட்டளைக்கு குடிகள் உட்பட்டு நடக்கும்படியாகவும் ஒரு அதிகாரப் பத்திரமுங் கொடுத்தார். அவ்விதமான கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு பெருஞ் சேனைகளோடு, ஊர் வந்து சேர்ந்து, விசேஷ பூமியை சுவாதீனப் படுத்திக்கொண்டு, அதில் வரும் வரிகளில் தமக்கும், தம் சேனைகளுக்கும் செலவானது போக மிகுதியை அரசனுக் கனுப்பினான். அரசன் அதிக சந்தோஷப்பட்டு "சேதுபதி" என்னும் பட்டத்தைச் சூட்டி, ஆனைகளையும், குதிரைகளையும், விருதுகளையுங் கொடுத்தனுப்பினார். இந்த உடையானே சேதுபதி ஸ்தானத்திற்கும், இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கும் முதலாயுள்ளவன். பிறகு உடையான் சேதுபதி இராமநாத புரத்தில் கோட்டையைக் கட்டிக்கொண்டு' அரசனைப் போல் ஆண்டுவந்தான். இவனுக்குப் பிறகு' இவனது குமாரன் குட்டன் சேதுபதி ஆண்டு வந்தான்." என டெயிலர் துரை கூறியுள்ளார்.

"These were followed by Muttu Krishnappa (1602-09). He is credited with the foundation of the dynasty of the Setupatis of Ramnad, the ancestors of the present Raja of that place, who were given a considerable slice of territory in the Marava country on condition that they suppressed crime and protected pilgrims journeying to Ramesvaram through that wild and inhospitable region. Mr. Nelson,s book (Pt. 3, 109-14 and elsewhere) deals at length with this transaction and other events in the history of the Setupatis' but these relate to the Ramnad zamindari and the present volume is not concerned with them." Vide, The Madura District Gazetteer, ch. II, p. 44.

"இராமநாதபுரத்து ராஜாவின் முன்னோனாகிய (உடையான்) முதல் சேதுபதியின் அஸ்திபாரத்திற்கு முத்து கிஷ்டப்ப நாய்க்கரே காரணஸ்தராவர். அவர் இராமேஸ்வரம் போகும் யாத்திரிகர்களை காக்கும் பொருட்டும், கொள்ளை கொலைகளை யடக்கும் பொருட்டும் அப்பகுதிக்கு முதல் சேதுபதியை காவல்காரனாக 1603-வருஷத்தில் ஏற்படுத்தினார்." என மதுரை கெஜடியில் கூறியுள்ளது. காவல்காரர் பாளையக்காரராகி, பாளையக்காரர் ஜமீன்தாராயினர். முத்து கிஷ்டப்ப நாய்க்கர் 1609-வருடத்தில் இறந்து விட்டார். இவருக்குப் பிறகு இவர் குமாரர் முத்து வீரப்ப நாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். (ஸ்ரீ பொன்னுசாமி தேவர் என்பவரால் சில குறிப்புகள் கொடுக்கப்பட்டு, நெல்ஸன் துரையால் மதுரை மானியூலில் எழுதப்பட்டுள்ளது. அவைகள் சுக்க ஆபாசக் குறிப்புகளான அப்பா லொதுக்கினம்.)

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

☞ * க்ஷத்திரியன். *

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

விக்கிரகாராதனம்.

தொடர்பு.

பவப்பிணியைநீக்க இக்கலியில் வேறு யாதொரு மருந்துமில்லை. கலியை வெல்ல வெவ்வேறு மார்க்கமும் கிடைக்காது. இக்கலியோ, உண்மை மதமாகிய வைதிக மதமிருக்க, பல பாபங்களில ஆரியர்களையும் இயக்குகின்றது. அந்தணர்களோ! பெரும்பாலர் காலைமாலைகளில் சூரியனுக்குச் செய்யுந்தர்ப்பணத்தை மாற்றி அச் சந்தியைக்கே தர்ப்பணஞ் செய்துவிடுகிறார்கள். அவர் திருநாவில் இருபத்திநான்கு எழுத்துள்ள காயத்திரிக்குப் பதிலாக இருபத்காறு எழுத்தாலமைந்த ஆங்கிலேயர் பாஷை உலாவுகின்றது. இக்காலம் லோபமென்னும் புரசிற்கு இளவேனிற் பருவமும், காமமென்னும் பாதிரிமரத்திற்கு முதுவேனிற் பருவமும், கோபமென்னும் கடம்பத்திற்கு கார்ப்பருவமும், மோகமென்னும் நாணலுக்குக் கூதிர்ப்பருவமும், மதமென்னும் பனிபெய்யுமுன் பனிப்பருவத்திற்கும் மாத்ஸரிய மென்னும் ஜாதிப் புஷ்பத்திற்குப் பின்பனிப் பருவமாக முடிந்தது. இக்கலி தமது பூர்ணாரம்பத்துடன் கூத்தாடு மிவ்விடத்திற்றான் யாம் குடியிருக்கவேண்டியது. ஆதலால் அறிஞர்களே! இக்கூத்தைக் கண்டு திகைக்காது விழித்திருங்கள்! இவ்விதப் பெருந்தீங்குகளை விலக்கப் பிம்பங்களில் கடவுளை வழிபடுதலன்றி வேறு வழி இல்லை.

"அறிவினர்க்குப் பிரதிமைகளிலும் யோகிகட்கு உள்ளத்தும் ஹரியிருப்பார்" என்னும் ஓர் வசனம் ஆரியர்களுடைய உள்ளத்தை ஒருவாறு கலக்குகின்றது. ஒருக்கால் கடவுளைப் பிம்பத்தில் ஆராதித்தால் தாம் அறிவினராய்ப் போவோம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். இவர்கள் அவ்வசனத்தின் உண்மைப்பொருளை உணர்ந்தால் அவ்வாறு எண்ணத் துணியார்கள். அதன் பொருள் கடவுள் கருணாமூர்த்தியாதலின் யோகத்தில் வலிமையுள்ளார்க்கு உள்ளத்திற் றோன்றுவான்; அவ்வித ஆற்றலற்றவர்க்குப் பிரதிமைகளில் ஆவிர்ப்பவித்து அருள்புரிவான் என்பதே. இதனால் நல்ல புத்திமான்களும் பிரதிமைகளில் ஆராதிக்கலாமென்றே ஏற்படுமின்றி வேறில்லை. அநேக பெரியோர்களும் பிரதிமைகளிலே கடவுளை வழிபட்டு நற்கதி பெற்றிருக்கின்றார்கள். இஃதொரு புறங்கிடக்க. தற்காலத்துச் சிலர் கோவில்களிலே தேவதாசி யென்னும் சிலர் இருப்பது அடாதென ஆக்ஷேபிக்கின்றனர். அஃதன்மையே. பரமேசுவர ஆலயங்களில் பரிசாரகம் பாட்டு ஆட்டம் முதலியவை அவர்களுக்கு உண்டெனச் சில வாகம நூல்கள் கூறுகின்றன. சக்கரம் சூலம் முதலிய சம்ஸ்காரங்கள் அவர்களுக்குண்டு. சில நியமங்களும் தர்மங்களும் ஆசாரங்களும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அவ்வழி அவர்கள் நடந்தால் அவர்கள் கடவுளுக்குப் பரிசாரகம் செய்யலாம். அவர்க ளிக்காலத்தில் அவ்வாறு நடப்பதில்லை என்பது எம்மனதுக்கும் ஓர் பெருந்துயரமே. கலிமகாராஜன் ராச்சியபரிபாலனம் செய்யும் இக்காலத்து எவர்தான் தம் தம் குல தர்மத்தை அநுஷ்டிப்பார்கள். ஆலயங்களில் முதலிற் பூசை செய்பவரைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். இதிற் பெரும்பான்மையோர் வேதாக்ஷரங்களை உச்சரிக்கவேணும் ஆற்றலற்றவர். அவரைத்தான் குற்றங்கூறிப் பயனென்னை? ஆலயத்தின் சர்வ நடபடிக்கைகளும் தர்மகர்த்தன் சுவாதீனமாகலின், தன்னை அடுத்திருப்பவரைப் பூசகனாகவும் பரிசாரகனாகவும் சமையற்காரனாகவும் நியமிப்பான். அவர் சிற்றின்பப் பிரியராயின் அவ்வாலயத் தேவதாசிகள் காலந்தப்பாது வந்து ஆடுவார்கள். இவர்களுப் பெரும்பொருள் தேடும் வழி தெரியும்.

ஏதேனும் ஒரு பெரிய உற்சவம் நேர்ந்தால் வரிசை வரிசையாய்த் தீவர்த்திகளை வீதிகளிற் கொளுத்திச் சனங்களை மகிழச் செய்வதால் அவர்களால் அகற்றப்பட்ட இருள் ஒருங்கு கூடிவந் தொளித்தது போல் தீண்டுவாரின் தீபங்களெல்லாம் அவிய அங்கு இருள் குடிகொள்கிறது. தர்மகர்த்தரைச் சேர்ந்த ஆசிருதர்களுக்கு அகமும் புறமும் அன்னம் ஆபரணங்கள் அதிகமாய் அளிக்கப்படினும் கடவுளுக்கு ஊசாது உலராது ஒரு சிறு கவளம் அன்னம் கிடைப்பது மிக அரிதாயிருக்கின்றது. அவரவர் எனக்கிந்த அன்னம் வேண்டுவதில்லையென அரிசியாகவே கொள்ளை கொள்கின்றார்கள். இனி அருச்சகர் புண்ணியாவாசனத்துக்குச் சிறிது அரிசி வேண்டுமென்றால் அது கிடைப்பதரிது. கிடைக்கினும் சிறு நொய்யே இட்டும். மேளகாரர் தாசிகளுக்குக் கொடுக்கும் படியரிசியோ சீரகச் சம்பாவுக்குக் குறைவதில்லை. அவர்களுக்கேற்பட்ட சம்பளத்தில் அரைக்காற் சம்பளமும் அத்தியயன பட்டருக்குக் கிடையாது. அந்தோ! வைதிகம் இப்படியா ஒழியவேண்டும்! சிரத்தை இவ்வழியா தொலையவேண்டும்! நாம் ஒருவரைத் தூஷிக்க வந்ததாய் எண்ணக் கூடாது. இக்காலத்துச் செய்கைகளைக் கண்டு ஆற்றாது மனத்துயர முற்றுப் புலம்புகின்றோம். ஐயன்மீர்! ஆலய விசுவாசத்தைக் கைவிடாதீர்கள். ஆலயம் வாழ்ந்தால் ஆருயிர் வாழும் என்பதை நீங்கள் அறியாததன்று. இனியேனும் ஆலய விஷயமாகச் சிந்தியுங்கள். மிக்க பொருளாசை யற்றவரும் தேவ திரவியத்தில் அச்சமுள்ளவரும் வேதாகமங்களிலே விசுவாசமுள்ளவரும் கடவுள் பக்தியுடையோரும் பற்பல நூல்களின் உண்மை யுணர்ந்தோரும் நற்குலத்தே பிறந்தோரும் ஆகிய சத்புருஷரை தர்மகர்த்தர்களாகவும், வேதாகமங்களை யறிந்து அதிற் கண்ட விதிகடவாது ஒழுகும் இயல்பினரையே தேவகைங்கரியார்ச்சனைகளுக்கு அதிகாரிகளாகவும், ஞான சாஸ்திரங்களிலும் ஆகமங்களிலும் நற்பயிற்சி யுடையோரையே ஆலய பண்டிதர்களாகவும் நியமிக்கத்தக்க முயற்சி செய்யுங்கள்! பூர்வஜன்மத்தில் நாம் செய்த ஈசுவராராதனத்தின் பலனாலேயே இப்பொழுது அக்கடவுள் வழிபாட்டை மறப்போமேயானால் பின் எவ்வித ஜென்மம் வருமோ? முற்காலத்திலே பல தேவாலயங்களைப் பிரதிஷ்டை செய்த புண்ணியசீலர் பெயர்கள் பற்பல தேவாலயங்களிலும் மலைகளிலும் விளங்குவதை நீங்கள் கண்டதில்லையா. தன் வயிற்றை நிறப்புவது மிருகங்களுக்கும் இயல்பாதலின் மனிதராய எமக்குக் கடவுள் வழிபாட்டினாலன்றோ மேன்மையுண்டாம். நமக்கு நல்ல சரீரத்தைக் கொடுத்தருளிய கடவுளை வழிபடாவிடில் அவர்க்கு நாம் பெரும் கடனாளியாவோ மல்லவா. அது நமக்கு அடுக்குமா?

நம் மடாதிபதிகள் உலகவியலறியாது நித்திரா நிஷ்டையிலிருப்பது உங்களுக்குத் தெரியாதா? அவர்கள் திருமடாலயங்கள் கருங்கற்களாலமைந்தனவாதலால், நீர், நெருப்பு, கள்வர் முதலிய உபத்திரவமின்றிச் சீடர் வீசும் வெண்சாமரக்காற்றுத் தம்மீது படப்பட்டு மெத்தைகளிலே அவர்கள் படுத்துறங்குகின்றார்கள். எவர் எம்மதமானாலும் அவர்க்கென்ன. தாமும் தம்மினத்தாரும் உண்டுடுத்துச் சுகிக்கப் பணம்போதாதாயின் சிஷ்யார்ச்சனஞ் செய்ய வெளியில் விஜய யாத்திரை செய்வார்கள். அல்லது ஏதேனும் தேவாலயங்களிலே தமக்கு மரியாதையாக வேண்டுமென்றும் அல்லது சிவிகை வெண்சாமரங் குடை முதலிய எடுபிடி சாமான்கள் செய்யவேண்டுமென்றும் ....என்றும் நினைத்து வெளியாத்திரை செய்கின்றார்களேயன்றி வேறில்லை. இனி ஆலயங்களையும் ஆரியமதத்தையும் ஆதரிப்பவர் யாவர். எவ்விதத்தேனும் ஆலயங்களைச் சுவாதீனம் செய்து அங்கு சில மரியாதைகள் பெறவும் அவ்வாலய திரவியங்களைக் கைகண்டபடி செலவழிக்கவும் வேண்டிய முயற்சியிட்டும் அவர் விடுவதில்லை. ஆரிய மதத்தைக் காக்

கவும் அநாரியமதத்தைப் போக்கவும் ஆரணங்களைப் பயிற்றுவிக்கவும் ஆகமங்களை ஆதரிக்கவும் இவருக்கு அவகாசமேயில்லை.

அவர்களைச் சொல்லித்தான் பயனென்னை! யாவும் கலிகால வைபவமேயாம்! இக்கொடிய காலத்தும் ஏதோ கடவுளின் கிருபையால் நம் மத பத்திரிகைகளும் சிலதோன்றி வெளிவருகின்றன. அவற்றைப் பலர் வாங்குவதேயில்லை. இனியேனும் தேவாலயங்களில் விசுவாசமுற்று அதனாலும் நம்மவர் கடவுளுடைய அநுக்கிரகத்தைப் பெறுவாரெனக் கடவுளுடைய திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

சுந்தரராஜ சாஸ்திரி.

இலந்தூர்.

பச்சோந்தியின் பகட்டு.

(விகடன்)

பச்சோந்தி என்றால் பச்சை+ஓந்தி=பச்சோந்தியெனப் புணரும். பச்சை—பச்சைநிறமான, ஓந்தி=ஓணான் எனப்படும். பச்சை நிறமுள்ள ஓணானைக் குறிக்கும். அது விசேஷமாக மலைக்காடுகளில் காணப்படும். இதற்கு காலத்திற்குக் காலம், அதன் நிறம் மாறிக்கொண்டே வரும். ஒரு தரம் பார்த்தால் ஒரு நிறமாகக் காணப்படும். அதையே அடுத்துப் பார்த்தால் வேறு நிறமாகக் காணப்படும். ஜெகதீசன் அதற்கு இவ்விதத் தன்மையை அளித்திருக்கிறார். இப் பச்சோந்தியைப் போல் உலகில் மாறி மாறி வெளிப்படும் சாதியாருமுண்டு. அவர்களைத் தெரிவிப்பதற்கு முன் ஒரு கதையுங் கூறுகின்றோம்:—

ஒரு குரங்கு ஒரு காட்டின் வழியே போயிற்று. அப்போது அதன் வாலில ஒரு முள் பொத்திக் கொண்டது. குரங்கு அந்த முள்ளை எடுக்க முயற்சி செய்தும் முடியவில்லை. அப்போது அங்கே ஓர் அம்பட்டன் வந்தான் குரங்கு அவனைப்பார்த்து ‘ஐயா, என் வாலிலுள்ள முள்ளை எடுத்துவிடும்’ என்று கேட்டது.

அம்பட்டன், முள்ளை எடுக்க முடியாமையால், அவன் அதன் வாலை அறுத்துவிட்டான். குரங்கு கோபங்கொண்டு, ‘என் வாலுக்குப் பதிலாக உன் கத்தியைக்கொடு’ என்று கேட்டது. அம்பட்டன கத்தியைக் கொடுத்தான். குரங்கு அதை வாங்கிக்கொண்டு தன் வழியே போயிற்று.

போகும் வழியில் ஒரு பையன் ஒரு மாங்காயைக் கடித்துத் தின்றுகொண்டு இருந்தான். குரங்கு அவனைப் பார்த்து, பிள்ளாய், ஏன் மாங்காயைக் கடித்துத் தின்கிறாய்? இந்தக் கத்தியால் அறுத்துத் தின்னலாமே’ என்று சொல்லிற்று. ‘பையன் அந்தக் கத்தியால் மாங்காயை அறுத்தான். அறுக்கும்போது அந்தக் கத்தி உடைந்து விட்டது. உடனே குரங்கு, ‘என் கத்திக்குப் பதில் ஒரு மாங்காய் கொடு’ என்று கேட்டது. பையன் தன் மடியில் இருந்த மாங்காயை எடுத்துக் கொடுத்தான். ’

குரங்கு அந்த மாங்காயை எடுத்துக் கொண்டு வழியில் ஒரு சிறு பெண் அழுதுகொண்டு இருந்தாள். குரங்கு அவள் அருகில்போய், ‘பெண்ணே, ஏன் அழுகிறாய்?’ என்று கேட்டது. அந்தப் பெண், ‘என்னிடம் சாதம் இருக்கிறது, பதார்த்தம் ஒன்றும் இல்லை’ என்று சொன்னாள். இதோ என்னிடம் ஒரு மாங்காய் இருக்கிறது; நீ இதில் பாதி எடுத்துக்கொள் என்று குரங்கு சொல்லிற்று. அந்தப்பெண் மாங்காயை வாங்கி முழுதும் தின்றுவிட்டாள். குரங்கு அவள் கையைப் பிடித்துக்கொண்டு, என் மாங்காய்க்குப் பதில் உன்னிடம் மிகுந்து இருக்கும் சாதத்தைக்கொடு என்று கேட்டது. அவள் அப்படியே சாதம் கொடுத்தாள்.

குரங்கு அந்தச் சாதத்தை எடுத்துக்கொண்டுபோயிற்று. வழியில் ஒரு கிழவன் சோர்ந்து

உட்கார்ந்திருந்தான். அவன் பக்கத்தில் ஒரு மேளம் இருந்தது. அதைக் கண்ட குரங்கு, 'ஐயா ஏன் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்? - இந்தச் சாதத்தைச் சாப்பிடும்' என்றது. அவன் சாதத்தை வாங்கிக்கொண்டு குளத்தண்டை போனான். அப்போது குரங்கு அந்த மேளத்தைத் தூக்கிக்கொண்டு போய் ஒரு மரத்தின் மேல் வைத்து உட்கார்ந்து கொண்டது. பிறகு அது, "வாலு போச்சு கத்தி வந்தது டும் - டும் கத்தி போச்சு மாங்காய் வந்தது டும் - டும் மாங்காய் போச்சு சாதம் வந்தது டும் - டும் சாதம் போச்சு மேளம் வந்தது டும் - டும் டும் டும் டும், டும் டும் டும் என்று அடித்து விளையாடிக்கொண்டு இருந்தது."

என்னுங் கதையிற் கூறியவாறு குரங்கிற்கு ஒரு பொருள் போய், வேறொரு பொருள் வந்ததைப்போலவும், பச்சோந்தியின் நிறம் சமயத்திற்கு சமயம் மாறி மாறி வருவதைப்போலவும்; நமது அர்த்தனாரீச நாய்கருக்கும், அவரது சாதியார்களாகிய பள்ளிகளுக்கும், சாதிப் பெயர்களும், பட்டப்பெயர்களும் இரண்டொரு வருடத்திலிருந்து மாறி மாறி வருகின்றன. அதைப்பார்த்திருந்த அந்தக் குரங்கும் பறையறைந்து வெளிப்படுத்தத் துணிந்தது.

பிள்ளையை விட்டார்
நாயகரானார், டும், டும்
நாயகரை விட்டார்
நாயக வர்மாவானார், டும், டும்
நாயக வர்மாவை விட்டார்
வர்மாவானார், டும், டும்
நாய்கரை விட்டார்
நாயகரானார், டும், டும்
நாயகரை விட்டார்
பூபதியானார், டும், டும்
கௌண்டரை விட்டார்
கண்டரானார், டும், டும்
நாய்கரை விட்டார்
ராஜாவானார், டும், டும்
படையாளி விட்டார்
படையாட்சியானார், டும், டும்
நாய்கரை விட்டார்
வர்மாவானார், டும், டும்
பள்ளியை விட்டார்
பல்லவரானார், டும், டும்
சம்புரிஷி கோத்திரம் போச்சி
பிர்மருஷி கோத்திரமாச்சு, டும், டும்
வன்னியை தொலைக்க
வழிதேடுகிறார், டும், டும்
புதிய சாதியாய்
புறப்பட்டு விட்டார், டும், டும்
இதோடு நிற்பரோ
இன்னும் மாறுவரோ டும், டும்
கலியுக சாதியில்
புதிய சாதியாம் டும், டும்
ஐ, சுவாயா
கூத்தால் சிரியுங்கள், டும், டும்
இவர்களப்பனுக்குண்டா
பாட்டனுக்குண்டா, டும், டும்
புதிய வேஷம்
கட்டுகிறார்களையா, டும், டும்
துடும், துடும், துடும்.

ஜீவகாருணியம்.

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான்"

இ-ள். அந்தணரென்பவர், [அம்--தண்--அர்] அறவோர் தருமவடிவானவர்கள் [எதினாலெனின்] எவ்வுயிர்க்கும் [சரம் அசரமாகிய] எல்லா வுயிர்களிடத்து, செம்-தண்மைபூண்டு ஒழுகலான். நல்ல காருணிய முடையராய் ஒழுகுவராதலினால் என்பது. இதனால் பொதுவகை

யால் யாவரும் பேணுதற்குரிய ஜீவகாருணியம் சிறப்பு வகையால் அந்தணரிடத்தே நிலைபெறு மென்பதாயிற்று.

ஜீவன் ஆன்மா-அணு புற்கலன்-உயிர்-பசு சேதனன் என்பன ஒருபொருட்கிளவி......... இம்மை மறுமை இன்பங்களையும் வீடுபேற்றையும் ஒருங்கே பெறுதற்குரிய பரியாகிகள் யாவரோ அவர்மேற் கொள்ளற்பாலனவாகிய அறங்கள் எண்ணிலவாயினும், அவற்றுள் ஒப்புவமையின்றி மிகச்சிறந்து நிற்கும் பேரறமாவது இச் சீவகாருணிய மொன்றேயாம். கொல்லாமை வெகுளாமை இன்னாசெய்யாமை மன்னுயிர்க்கு உறுதி பேணல் முதலியனவாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அறங்களெல்லாம் "ஜீவகாருணிய" மென்னும் பொதுச் சொல்லில் அடங்கி நிற்கும். இதற்குமேற் சிறந்த அறம ஒன்றுண்டென்று எந்நூலினும் கண்டு கேட்டறியோம். அறம்பற்றியே—"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று"—என்றது தமிழ்வேதம். கொல்லாமை யொன்றே தலையாகிய அறம், மற்றிரண்டாவது பொய்யாமை என்பது இதன் பொருள். இதனால் ஏனைய அறங்களெல்லாம் ஒருவனிடத்து உளதாயினும் இச் சீவகாருணியம் ஒன்றில்லாதபோது அவை பயனற்றனவாகி விடும் எனவும் ஏனைய அறங்களெல்லாம் இல்லையாயினும் இச் சீவகாருணியமாகிய பேரறம் ஒருவனிடத்து உளதாயின் அஃது எல்லா நன்மையுந்தரும் எனவும் நிச்சயிக்கப் படுகின்றன. இனி புண்ணியம் என்பது யாது? பாவம் என்பது யாது? என்று தீர்க்க விசாரஞ் செய்து ஒரே வார்த்தையில் முடிவுரைக்க நேருங்கால் உயிர்க்கு உறுதிபயக்கும் தொழில்கள் யாவை? அவை புண்ணியம். அங்ஙனமல்லாது மன்னுயிர்க்குத் துன்பியற்றும் தொழில்கள் யாவை? அவை பாவம் என்று முடிவதன்றி வேறில்லை. துன்பங்களெல்லாவற்றினும் முடிந்தது மரணத் துன்பமே யாதலானும் இன்பங்களெல்லாவற்றினுஞ் சிறந்தது அது தவிர்தலே யாதலானும் கொலை ஜீவகாருணியம் என்னுமிரண்டையே பாவம் புண்ணியமெனச் சிறப்பெடுத்துக் கொள்ளப்பட்டது. இனிச் சீவகாருணிய சீலம் ஒருவரிருவர்க்கன்று. எச்சமயத்தார்க்கும் எச்சாதியார்க்கும் எவ்வாசிரமிகளுக்கும் எத்தேயத்தார்க்கும் பொதுவாகி மறுக்கொணா நிலையில் விளங்கும் பேரறமாம்.

இப் பொதுவறம் இல்லாதபோது சாதிசமய ஆசிரமங்கள் பற்றிச் சிறப்புவகையால் மேற்கொள்ளப்படும் அறங்கள் எத்துணையுளவாயினும் அத்துணையும் பயன்படாது அவலப்படுமென்றுணர்க. ஆதலின் இவ்வறத்தை மறுப்பார் ஒருவருமில்லை. ஆயின் இக்கால கிறிஸ்தவர்களுள்ளே சில பகுதியார் மட்டும் மனிதரையொழித்து ஏனையவுயிர்களைக் கொல்லுதல் கொலைப்பாவமாகாதெனக் கூறிவழிகின்றார்கள். அது மனிதர்க்கு மட்டுமே ஆத்மாவுளதென்றும் ஏனையவுயிர்கட்கு ஆத்மாவில்லையென்றும் இறந்தவுயிர் மீளப்பிறத்தலில்லையென்றும் இன்னணங் குருட்டு நியாயங் கொண்டு சொல்லுவதாதலின் இது சுருதியுக்தி அநுபவ விரோதமான அவல சித்தாந்த மென்பதை மற்றோரிடம் விரித்து விவரிப்போம். ஆண்டுக் காண்க. இது நிற்க,—இனிச் சீவன் என்பது யாது? அதனிலக்கண மென்னை யெனின், அஃது சித்தாந்த விசாரம் செய்யுமிடத்தே விரித்துக் கூறப்படும். அது நிற்க; இக்கால ஆரியருள்ளே அநேகர் இப்பேரறத்தின் பெருமையை உணராதவர்களாய் அந்தோ! பிறவுயிரைக் கொல்லுதல் துன்புறுத்தல் முதலிய பாதகவழிகளிலே செல்லுகின்றனர். இங்ஙனம் ஜீவகாருணியத்தை இழந்து வாழ்பவர் யாவரோ அவர் தம்முயிர்க்குறுதி செய்துகொள்ள மாட்டாதவராதலின் அவர் தங்களுக்குத் தாமே துரோகிகளாயிருக்கின்றனர். இந்த இடத்திலே பலர் பலவிதமாக ஆக்ஷேபிப்பதுளதாதலால் அவைகளையெடுத்துக்காட்டி நிறுத்துவாம்:—

ஈண்டு முக்கியமாய்ச் சிந்திக்கற்பாலது யாதெனின் ஜீவகாருணிய ஒழுக்கம் பேணி உய்தி கூடவிரும்புகிற ஒருவன் தனக்குப் பிறவுயிர்களால் நிகழும் செய்திகளில் எவையெவை துன்பங்களாகத் தனக்குக் காணுகின்றன

வோ அவை பிறவுயிர்கட்கும் துன்பமாம் எனவும், தனக்கு எவை யின்பமாகக் காணுகின்றனவோ அவை பிறவுயிர்க்கும் இன்பமாமெனவும் இங்ஙனம் அறிவாலுய்த்துணர்ந்து கொள்ளக்கடவன். பிறவுயிரைக் கோபித்தல் துன்புறுத்தல் கொல்லுதல் செய்ய மனமெழும்போது அவ்வெழுச்சியை மீறவிடாது அறிவினால் தடுத்து திருத்திப்பிறவுயிர்கள் தன்னிடத்து அங்ஙனஞ் செய்ய முயலுங்கால் அது தனக்கு எவ்வாறிருந்தது என்பதைச் சிந்திக்கக் கடவன். அப்படிச் சிந்திந்தால் அம்மனவெழுச்சி அங்ஙனே மடங்கிப்போம், போகவே ஜீவகாருணிய குணம் தலைப்படும், படவே பேறும் பெருகுமென்க.

இனி நம்மவர் இங்ஙனம் விசாரியாது தினந்தோறும் எண்ணிறந்த வுயிர்களை வருத்தியும், வஞ்சித்தும், கொன்றும், பவக்கடலில் மூழ்குகின்றார்கள். அனேகர் ஆத்மாசுவரூபத்தைச் சிறிதும் விசாரியாது மூட்டைப்பூச்சி பேன் முதலியவை அற்ப செந்துக்கள் தானே அவைகளைக் கொல்வதும் ஓர் பாவமாகி விடுமோவென அசட்டைசெய்து விடுகிறார்கள். ஈண்டுப் புத்திமான்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களிவை. அதாவது, ஆன்மாக்களிலே சிறிய ஆத்மாவென்றும் பெரிய ஆத்மாவென்றும் பேதம் கிடையா. எல்லா ஆத்மாக்களும் ஒரே தன்மையுடையன. அவைகள் அணுபந்தம் நீங்கி வீடுபேறெய்துதற்குரிய பரிபாகம் வரும் வரையில் அவைகளை எல்லாம் வல்ல இறைவன் சிருட்டியாதிகளில் விடுத்து நடத்துகின்றார். அவையங்ஙனம் நடைபெறும்போது தத்தங்கன்மத்துக்கிடான தேருடல்களைமாறிமாறி யெடுத்துக், கொள்ளிவட்டம் போலும் காற்றாடிபோலும் காலசக்கரத்திற் சுழன்று வருகின்றன. அங்ஙன மெடுக்குஞ் சரீரங்கள் நால்வகை யோனி [அண்டஜ ஸ்வேதஜ உத்பிஜ ஜராயுஜம்] எழுவகைத் தோற்றத்தில் (தேவர் மக்கள் புள் விலங்கு ஊர்வன நீர்வாழ்வன தாவரங்கள்) எண்பத்துநான்கிலக்ஷ பேதமாய்க் காணப்படுவன. ஓரறிவுமுதல் ஆறு அறிவுவரையில் பாகுபாடுடையன. அதாவது, பரிசவுணர்ச்சியாகிய ஓரறிவுடைய ஜீவன்கள் தாவரங்களேயாம். (மரஞ்செடி கொடியாதிகள்) தொட்டாற்சுருங்கி முதலிய செடிகளில் இது சாமானியர்களும் உணர்ந்து கொள்ளலாம். இனி சங்கு சிப்பி முதலியவை பரிசத்தோடு ரஸவுணர்ச்சியுமுள்ள ஈரறிவுயிர்களாம். எறும்பு கரையான் முதலிய அனந்த வுயிர்கள் அவ்விரண்டோடு கந்தத்தையுமறிகிற மூவறிவுயிர்களாம். வண்டு தும்பி ஈ முதலியவை அம்மூன்றினோடு உருவத்தையுமறிந்த நாலறிவுயிர்கள். இனி பசு பக்ஷியாதிகளாய விலங்குகளெல்லாம் அந்நான்கினோடு சத்தத்தையுமறிகிற ஐயறிவு உடையனவாம். இனி தேவர் மக்கள் நரகர்முதலினோர் ஞானேந்திரியங்களாகிய அவ்வைவுணர்வே யன்றி மனாதி அந்தக்கரணங்களும் கலையாதி யுள்ளத்தத்துவங்களு முடையராய் அதுகொண்டு போகக்காக்ஷி முதலிய விசேஷப் பகுத்தறிவுடையராந்தன்மையர் ஆதலால் இன்னோர் ஆறறிவுடையா ரெனப்படுவர். இதனானேஉயிர்கள் உயர்திணை அஃறிணையென இருவேறு வகைப்பட்டன. ஆகவே சன்மானு குணமாக ஒரே ஆன்மா இன்று சுடுகெறும்பு சிறிய சூக்கும வுடலெடுக்கவும் உயர்திணையாயிருந்த ஒருயிர்கன்ம பேதத்தால் அறுநிவாழ்ந்து அஃறிணையாகவும், அஃறிணை உயர்திணையாகவும் மாறுதல் கூடும். இதன் விரிவு பின் விரிக்கப்படும். ஈண்டுநிற்க. இங்ஙனம் தோன்றி நின்றழியுந் தன்மையது உடல்களேயன்றி உயிரன்று; அது நித்தப் பொருளாம். இங்ஙனம் விசாரித்தறிந்த விவேகிகள் சிறியவுயிர்தானே யென்று அலக்ஷியமாகப் பேன் மூட்டை எறும்புமுதலியவுயிர்களைக் கொல்லத் துணிவரோ? தம்மைப் பெரிய வுயிரென்றும், அவை அற்ப வுயிரென்றும் மதித்திருக்கின்ற இவர் தாம் சிறிது காலத்தின் முன் எவ்வாறிருந்தனர்? கன்மத்திரயத்தால் கட்டுண்டு தாபத்திரயத்தால் மொத்துண்டு காலத்திரயத்தில் சிக்குண்டு புவனத்திரயத்தால் சுழலுண்டு சரீரத்திரயத்தால்புக்குண்ணுமிவர் தமது தாயுந் தந்தையுஞ் சந்தித்தபோது ஆண்டுக்கூடிய சுக்கில சுரோணிதத்தில் அறுகின் நுனி பனித்துளிபோற்றங்கிக் கிடந்தவரன்றோ? அதன் பின்

னன்றே பிண்டமாய் முண்டமாய்ப் பேருடலாய் வெளிவந்து ஐந்துமுழம் வளர்ந்தனர். இதனைச் சிந்தியாது ஏனையவற்றை அற்பவுயிரென நினைப்பதென்னை? இனி அவை நம்மைக் கடித்துத் துன்புறுத்துகின்றனவே! அதனால் அவைகளைக் கொல்லுதல் பாவமன்று எனின் அதுபற்றிச் சிறிது சிந்திப்பாம். அவ்வுயிர் தம் கன்மத்திற்கீடாக அவ்வுடலைத் தாங்கியது. சிறிதாகவோ பெரிதாகவோ ஒருடல் வந்தபோது அது நிலைத்து வளர்வதற்கு ஆகாராதிகள் இன்றியமையாது. ஆகவே அது கொள்ளாக்குரிய பசி முதலியன விட்டு நீங்குகலின்று. ஆதலால் அதன் பசியை மாற்ற இரை தேடுவது அதற்கியல்பாயிற்று. இனி இவ்வழியில் இரைதேடுதல் அது இன்னவுயிர்க்கு இவ்விதம் துன்பமாம் என்று சிறிதும் பகுத்துணராது அதனாலே அது மனிதர் முதலினோரைக் கடித்து உதிரங்குடிப்பதாயிற்று. அதனால் மனிதருக்குத் துன்பமாம். அவ்வழி தனக்கு அழிவு வரும் என்று அது உணர்ந்தால் மனிதனை வருத்துமோ? ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்யும்போது அக்காரியத்தால் தன்னுயிர்ச் இருதி வருமென்று தெரிந்தால் பிறகு அக்காரியத்தைச் செய்வானா? 'இதுபற்றியன்றோ' தான் சாக மருந்துண்பாருண்டோ'? என்று பழமொழி வழங்குகின்றது. இனி அவ்வுயிர்களால் நமக்கு வரும் துன்பம் தாபத்திரியங்களில் ஒன்றன்றி வேறன்றே? பழயகடனைக் கட்டி ஒழித்து அக்கடனால் வருந்துன்பத்தில் நீங்க நினைக்கும் ஒருவன் பின்னும் கடன்வாங்குவனோ? அதுபோல் தாபத்திரயத்தில் மொத்துண்டு சலித்து இனி இக்கன்மபந்தத்தில் நீங்க வேண்டுமென நினைக்கும் புத்திமானொருவன் பின்னும் ஆகாமியம் விளையுமாறு அவ்வுயிர்களைக் கொல்லத் துணிவானன்றோ? இனி முகடு முதலிய வுயிர்களை நாம் கொன்றழிப்பதினாலே அவை இவ்வுலகத்திலில்லாதொழியுமோ? அவற்றால் வரும் துன்பம் நீங்குமோ? வெட்டவெளியான நிலத்தில் மழை பொழிந்த வழி அனந்தம் தாவரங்கள் இளைத்து, பிரித்தொருகால் ஒருங்கே யழிந்து பின்னுந் தோன்றுவது போலவே 'ஸ்வேதஜம்' முதலிய வுயிர் ஓரோர் காலத்துமிக்குத் தோன்றி நின்றழிவதன்றோ? அதனைத் தடுக்க எவர் வல்லார்! அப்படி வல்லாரொருவருளராயின் அவரே கடவுளாவரன்றிப் பிறிதோர் கடவுளைக் கொள்ளல் மிகையாமென்றொழிக. ஆகவே (பராப்பினிப்புற்ற சிலரெல்லாம் பசித்தக்கால் தின்று பின்னும் பசிப்பவரே யென்பது கருத்து) இவ்வளம் விசாரித்துணர்ந்த விவேகிகள் அவை புகுவுயிர்தானே யென்று, மறந்தும் கொல்ல நினையாரென்க. திர்ஷ்டாந்தத்திற்காகப் பேன், முகடு முதலியவற்றை இங்கெடுத்து விவகரித்தோம். இதனை மற்றெல்லா வுயிர்களிடத்தும் அது வயமாக்கி ஒட்டிப் பொருள் கொள்க

இன்னும் வரும்.

(சாமக்குளத்தான்.)

வெளியாகிவிட்டது!

எது? எது?

ஜெயவீர பாண்டியன்.

(Mr. M. முருகேச பாண்டியன் எழுதியது.)

இன்றே யெழுதுங்கள்.

விலை அணா. 8. V. P. சார்ஜ்வேறு

10 அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு

ஒரு புஸ்தகம் அனுப்பப்படும்.

விலாசம்:—

வித்யாபி விருத்தி சங்கம் காரியதரிசி

கமுதி. (இராமனாதபுரம் ஜில்லா)

நாடார் என்னுஞ் சொல்லாராய்ச்சி, அரங்கேற்ற நிதி வசூல்.

(இடையன்குடி)

டி. ஜி. மணியவர்கள் ரூ 10—0—0

(சாத்தன்குளம்)

சு. பெ. ஆசீர்வாத நாடார் ரூ 2—0—0

(கனிவருங்கூடல்)

ப. பக்ஷிராய நாடார் ரூ 2—0—0

ஆகமொத்தம். 14—0—0

டி. ஜி. மணி அவர்களால் வசூலித்தனுப்பப்பியவை.

தொண்டமண்டலச் சான்றோர் தருமபரிபாலன மகாசபை.

இம் மகாசபை, சென்னையும், அதற்கு அடுத்துள்ள ஜில்லாக்களிலுமுள்ள கிராமணிகளுக்குள் 72-வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப் பட்டது. இம் மகாசபை கிராமணிகுலப் பெரியோர்களால் ஏற்படுத்தி விட்டுப்போன சத்திரம், சாவடி, மடங்களையும், தரும தானங்களையும் கோயில் குளங்களையும், நந்தனம் உச்சவாதிகளையும் பரிபாலித்து வருவதற்கே ஏற்படுத்தப் பட்டது. இதில் தலைவர், உதவித்தலைவர், காரியதரிசி, உதவி காரியதரிசி, பொக்கிஷத்தார், கணிதர், கணித பரிசோதகர், இன்னுஞ் சில மெம்பர்களும் காலத்திற்கு காலம் ஏற்படுத்தப் பட்டு வந்தனர். இச்சபை இதுவரைக்கும் ஒருவரின் பின் ஒருவராக முந்து தலைவர்களால் பரிபாலிக்கப்பட்டுவந்து, கடைசியாக ஸ்ரீமான், பழவர்க்காடு-நயினியப்ப கிராமணியின் தலைமையின்கீழ் நின்று; அவர் இறக்க அவருக்குப் பதிலாக 1925-ஹு பிப்ரவரி மீ 22உ ஞாயிற்றுக்கிழமை, சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை, இராமகிருஷ்ணன் தெருவு, 16-வது நெம்பருடைய வீட்டில் கூடிய மகாசபையில் மெஜாரிட்டியார்களது ஓட்டின்பேரில் பழவர்க்காடு, ஸ்ரீமான், குப்புசாமி கிராமணியார் அவர்களை நியமிக்கப் பட்டு, நடத்தப்பட்டு வருகின்றது. இப்பொழுது அம் மகாசபைக்கு ஊன்றுகோலாயிருப்பவர்கள்.

தலைவர்
ப. குப்புசாமி கிராமணியார்
உதவித் தலைவர்
ச. சோக்கலிங்க கிராமணியார்
காரியதரிசி
த. விஜய துரைசாமி கிராமணி
உதவி காரியதரிசி
ரா. மா. சுந்தரமூர்த்தி கிராமணியார்
பொக்கிஷத்தார்
ம. துலுக்காண கிராமணியார்
இன்னும் பலராவர்.

ஆகிய இவர்களே முக்கியஸ்தவர்களாவர். இச் சபையைச் சார்ந்த சொத்துக்கள் சுமார் நாலு, ஐந்து லட்சத்திற்கு மேற்பட்டிருக்கலாம். சரியாக பரிபாலனஞ் செய்தால் பத்து லட்சமும் ஆகலாம். இம் மகாசபையின் மெம்பர்களை இதுவரைக்கும் சாஸ்வத மெம்பர்களாகவே நியமிக்கப்பட்டுவந்தது. அம்முறைநல்லதாக எமக்குப் புலப்படவில்லை. யாமே இம் மகா சபையில் இருபது வருடமாக காரியதரிசி வேலையைப் பார்த்து வருகின்றேம். எலக்ஷனில் மூன்று வருடத்திற்கு ஒருவரை நியமித்தால் ஒவ்வொருவரும் அவரவர்கள் சாமார்த்தியத்தைக் காட்டி, தருமத்தை விர்த்தி செய்ய ஏதுவாகும். இம்முறையே சாலச் சிறந்ததென வெளியிடுகிறேன். ஒருவரே இருபது முப்பது வருடமிருந்தால் சிரத்தை அதிகப் படவில்லை. முதலில் சேரும்போது இருக்கிற சிரத்தை வர வர குன்றிவிடுகிறது. ஆகவே, எலக்ஷனில் மூன்று வருடத்திற் கொருவரை நியமிக்க இனி முயற்சிக்கக் கோருகின்றேம்.

த. விஜய துரைசாமி கிராமணி
காரியதரிசி.

நாடார் பரிபாலன சங்கம்,
கோலாலம்பூர்.

முதலாவது வருஷாந்தரப் பொதுக்கூட்டம்.

ஐயா,

நாளது 1925-ம் வருஷம் ஜனவரி மீ 17உ சனிக்கிழமை மாலை 4-மணிக்கு சென்றல் ஓர்க் ஷாப்ஸ் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பின் பாஷா ரோட்டில் ஏற்படுத்தி யிருக்கும் பெத்தேல் தமிழ்ப்பாடசாலையில் மேற்படி சங்கத்தின முதலாவது வருஷாந்தரப் பொதுக் கூட்டம் நடத்தத் தீர்மானித் திருக்கிறபடியால் தாங்கள் இன்னும் தங்களுக்குத் தெரிந்த நம்குல மித்திரரையும் அழைத்து விஜயஞ் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு, தங்கள் வரவை விரும்பும்,
ஜி. எஸ். டி. தாசன் நாடார்,
கண்ய செக்ரற்றேரி.

புண்டரதாரணம்.

(பிர்மவித்தியா.)

இனி ஊர்த்வபுண்டர விஷயத்தைப் பற்றிச் சிறிதெழுதுவாம். இவ்வூர்த்வ புண்டரத்தில் அவ்வமதத்தவர் அணியும் வழி பல வேற்றுமைகள் தோன்றி நிற்றலால் அவைகளின் பயனை இன்னதெனத் துணிந்தெடுத்தோதற்கு எம்மாலியன்றிலதாயினும், எட்டிய வரையில் அதன் பயனை எடுத்துக்காட்டுவாம். இங்கு ஊர்த்துவகதியை விரும்புவோம். ஊர்த்து புண்டரத்தைத் தரித்தல வேண்டுமென வேதத்தில் ஓர் வாக்கியமுண்டு. அங்கு ஊர்த்துவகதி யென்பது பரமுத்தி யெனவும் கிரமமுத்தி யெனவும் இருவகைப்படும். [ஊர்த்துவம்—மேனோக்கல்.] ஊர்த்துவ முகமாயிருத்தலால் எல்லாவித திருநாமங்களையும் ஊர்த்துவ புண்டரமெனவே வழங்குவர். ஆயினும் பொருளும் அமைப்பும் ஒவ்வொன்றற்கும் வேறுபடும். இதற்குரிய பொருள்கள் இருவகைப்படும். அவையாவன:—திருமண்ணும் சந்தனமுமாம். அத்திருமண்ணும் வெண்ணிறம் பெற்றதும் பொன்னிற முள்ளதுமென இருவகையாம். சந்தனமும் வெண்சந்தனம் செஞ்சந்தனமென இருவகைப்படும். அஃதின்றி மஞ்சட்பொடியும் குங்குமமும் இப்புண்டரத்துக் குபயோகமாவது முண்டு. இங்குள்ள ஊர்த்துவ புண்டரங்களெல்லாம் வைஷ்ணவ மதத்தின் அதை விஷ்ணுபக்தர்கள் தரிக்கற்பாலர். இனி திருமண்ணினால் அணியும் திரிபுண்டரம் எழுவிதமும், சந்தனத்தால் அமைவது இரண்டு விதமுமாம். அதனுட்பிரிவு வெண் திருமண்ணால் நான்கும் பொன்னிற மண்ணால் மூன்று விதமுமாம். அவற்றுள் வெண்மண்ணாலமைந்த நான்கு பேதங்களாவன:—வைஷ்ணவருட் சிலர் நடுவிற்றாவும் மஞ்சட்பொடியின்றி ஓர் சர்க்கலவில் தரிக்கும் சிற்றுத்திருநாமம் ஒன்று; அதையே சிறிது பெரியதாய் இரண்டரைக்கவு சிறுகிளைறிட்டி நடுவில் மஞ்சட்பொடி இடுவது ஒன்று; ஓர் விரலகலத்தில் அடியிற்பிறைபோல் வளைந்து அவ்வாவிற்றுனே இருபுறமும் இருகிளைகள் தோன்ற நடுவில் திருச்சூர்ணம் அமைந்த வடகலைத் திருநாமம் ஒன்று; நாசியடியில் ஓரங்குலக்கமலப்பீடம் இட்டு அதன்மேல் கண்ணன் திருவடியினைத் திருவுருவம் பெற்றுத் திருச்சூர்ணத்துடன் விளங்கும் தென்கலைத்திருநாமம் ஒன்று; பொன்னிற மண்ணாலமையும் திருநாமத்தின் வேற்றுமைகளாவன இடைவெளியுள்ளதும் அஃதில்லதும் வட்டவடிவானதும் என மூவகையாம்.

போசன முதலிய காலங்களில் வெண்சந்தனத்தால் சிலர் தரிப்பதும் செஞ்சந்தனத்தால் வல்லபமதத்தர் தரிப்பது மென இருவகைப்படும். பெண்களுக்குப் புருவத்தி னடியிற்றரிக்கும் பிறைபோன்ற புண்டரம் ஒன்று. ஆதலே இப்புண்டரம் தரிப்போர் வணங்குங் கடவுளைப்போல் இதுவும் தசாவதாரம் பெற்றதாம். இனி இதன்நடுவில் மஞ்சள்பொடியில் ஓர் குறியுமதேனும் அப்பொடியைத் தரித்தலின்மையால் அதனை இவற்றுளடக்கிக் கூறினுமென்க. ஸ்மிருதிகளில் கன்மங்களின் அங்கமாய் நீரினால் ஓர் நெடுங்குறி விதிக்கப்பட்டது. இப்பதினொருவித புண்டரங்களில் முறையே வைதிகம் ஸ்மார்த்தம் தாந்திரிகம் என மூவகைப் பாடிட்டு அவற்றின் அமைப்பையும் அவற்றின் பிரயோஜனங்களையும் குறித்து ஈண்டுக் கூறுவாம். வேதங்களிலே சாமான்யமாய்ச் சில விடங்களிலே ஊர்த்துவ புண்டர விதியும் வாசுதேவோப நிடதத்தில் அதற்குப் பொருள் அமைப்பு முதலியவைகளும் கூறப்பட்டுள்ளன. அதன் சுருக்கமாவது:—கோபி சந்தனமென்னும் ஓர் திருமண்ணை நெற்றிமுதலிய விடங்களி லிடவேண்டுமென்பதும் நீரினாலூர்த்துவ புண்டரமுண்டென்பதும் அவ்வூர்த்துவ புண்டரம் இடைவெளி யுள்ளதும் இல்லதுமாகிய இருவகைப்படுமென்பதும் விஷ்ணுப்பிரீதியை அவை தருமென்பதுமே.

இன்னும் வரும்.

வன்னியர் என்னுஞ் சொல்லின் ஆராய்ச்சி.

வன்னியர் என்பது பள்ளிகளுக்கு சாதிப் பெயராய் பூர்வமுதல் வழங்கிவந்தது. வருகின்றது. அப்பெயரை 1925ஆம் ஜனவரிமாதம் முதலில் ஏற்பட்ட டவுன் போலீஸ்கோர்ட் கேஸில் A. முனிசாமி நாயகரும், தம்மை வன்னிய நாயகரும் (I belong to vanniah community) வன்னிய வம்சத்தவர் என்றனர். அப்படியிருக்க நமது க்ஷத்ரிய மித்திரனில் அதன் உண்மையை வெளிப்படுத்தியதால், உடனே அர்த்தனாரிசப்பிள்ளை வன்னியர் என்னும் பெயரை ஆராயவும், மாற்றிக்கொள்ளவுந் துணிந்தனர். அவர்களது ஆராய்ச்சியின் முடிவு வருமாறு:—

"தமிழ் நாட்டு க்ஷத்திரியர்களாகிய எமது சமூகத்தார் தற்போது பலவித பெயர்களால் தவறாய் வழங்கப்படுகின்றனர். தாங்கள் க்ஷத்ரியரென்பதில் சந்தேகங் கொண்ட சென்னைவாசிகள் தங்களை வன்னிகுலத்தவரென வழங்குகின்றனர். க்ஷத்ரியரெனல் தவறென்றும் சொல்லுகின்றனர். தென்னார்க்காடு ஜில்லாவாசிகளாகிய படையாட்சியர்கள் வன்னியரென வழங்குவது கூடாதென்கிறனர். இவ்விஷயம் நம் சங்கத்தில் விசாரணைக்கு வந்திருக்கின்றது. இருகட்சியார்களும் தங்கள் சாட்சியங்களை ஆஜர்செய்வார்களாக."

என அர்த்தனாரிச நாயகர் 1923-ம் ௵ ஏப்பிரல் 13உ தமது பத்திரிகை, பவனி-1, காட்சி-1, பக்கம். 7-ல் தெரிவித்துள்ளார்.

"நமது மரபார்க்கு வன்னியர் என்னும் பொதுப்பெயர் வழங்குதல் கூடாதெனல் கற்றுணர்ந்த ஆராய்ச்சிக் கவிஞர் பலரின் அபிப்பிராயம். எமது அபிப்பிராயமும் அஃதே. அவ்விஷயமாய்த் தென்னார்க்காடு ஜில்லா படையாட்சியர்கள் தேர்ந்த அபிப்பிராய முடையவர்கள். கோவை ஜில்லா குலமணியாகிய பூபதியவர்களும் அப்பெயர் கூடாதெனவே தங்கள் ஜில்லா சங்கத்திற்கு அக்நிகுல க்ஷத்ரிய சங்கமெனப் பெயர் தந்தனர். சேலம் ஜில்லா சங்கத்திற்கு யாமும் விவாத விஷயமான பெயரை மாற்றி, விவாத மின்றிய 'க்ஷத்ரிய சங்கம்' என்னும் பெயரைத் தந்தோம். அதை ஆட்சேபித்த சென்னை மகா சங்கத்தார்கள் சடிதம் எழுதியதும் எமது கருத்தைக் கவர்ந்தது. வன்னியர் என்னும் பட்டம் நமக்குத் தகுதி யுடையதா என்பதைப்பற்றி யாம் க்ஷத்ரியனில் விரிவாய்ஆராய்ச்சி செய்யப்போகிறோம்." எனவும்,

"வன்னியர் என்னும் சொல்லைக் கற்றறிந்த ஒவ்வொருவரும் கவனிப்பார்களாயின் அஃது ஓர் ஜாதிக்குப் பொதுப்பெயரா யிருக்கச் சம்மதியார்கள். ஆனால் க்ஷத்ரிய குலத்தில் ஏற்பட்ட மூன்று பிரிவுகளில் ஓர் பிரிவென்னவே ஒப்புக்கொள்வர். வன்னியர் என நாம் வழங்கும் மொழி வடமொழி. நெருப்பு சம்பந்த முள்ளவர்கள் என்பது அதன் திரண்ட பொருள். அம்மொழியைத் தமிழ்மொழியாய் நாம் ஏற்றுக்கொண்டால் சிறு தொழிலையுடையோர் வேடர் என்னும் பொருள்கள் அதற்குண்டு. மறவர், அம்பலக்காரர் முதலிய வகுப்பினர்கள் தங்களுக் குரியதாய் அதைக்கையாளுகின்றனர்.

மதுரை ஜில்லாவில் வன்னிநாடு என ஓர் பகுதியிருந்தது. அந்நாட்டை அரசாட்சி செய்த அரசர்கள் வன்னிநாட்டரசர்கள் என வழங்கப்பட்டனர். அவர்களே பிற்காலத்தில் வன்னியர் என வழங்கப்பட்டனர் என்பதற்கும் ஆதாரமுண்டு. எப்படியும் வன்னியர் என்னும் பெயர் ஓர் ஜாதிக்குப் பொதுப்பெயராகாமல் ஓர் பிரிவின் பெயராயும் ஓர் நாட்டின் பெயராயும் அந்நாட்டுக்குரிய அரசர்களின் பெயராயும் முடிந்ததன்றி வேட்டுவர்கட்கு காரணப் பெயராயும் வழங்கியதென்று நூல்களிலும் அநுபவத்திலும் நாம் காண்கிறோம். கோயம்புத்தூர் ஜில்லாவில் வன்னிய பதம் வனசரரைக் குறிக்கும். மதுரை ஜில்லாவில் அஃது மறவர்களைச் சுட்டும். பழனியில் வன்னியர்வீதி ஒன்றுண்டு. அங்கு சென்று விசாரித்ததில் மறவர்வீதி யெனக் கண்டோம். ஆதலால் தமிழ் நாட்டில் பெரும் பகுதியினராய்த்

தற்போது வசிக்கும் அரசர் குலமக்களுக்கு அப்பெயர் உற்றதல்ல வென்பதை யாம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்."

என அர்த்தனாரிச நாயகர், 1923-ம் ௵ மே௴ 28௳ தமது பத்திரிகை, பவனி. 1. காட்சி. 4. பக்கம், 2-ல் தெரிவித்துள்ளார். அப்படியாயின் "சென்னை வன்னிய மகாசங்கம், வன்னிய புராணம், வன்னிகுல விளக்கம், வன்னிகுல மித்திரன், வன்னிவம்சப் பிரகாசிகை" என்போன்றவைகளுக் கெல்லாம் இனி என்ன வழிதேடுவர். அந்தோ; இவ்வளவு நாள் குலப்பெயராக ஆதரித்துவந்த அவ் வன்னியர் என்பதை, நடுத்தெருவில்விட நேர்ந்தது. இனி அதற்குப்பதிலாக, பண்டமாற்றுதலைப்போல், எப்பெயரை மாற்றி வைத்துக் கொள்ளுவார்களோ? அதுசகலருக்கே வெளிச்சம்.

இதோடு இன்னொரு வேடிக்கை." பள்ளியர். படையாட்சியர், அரசுபள்ளியர் என்னுஞ் சொற்கள் தம்மில் சிலர் எண்ணுமேற்படி இழிவுடையன வல்ல. அவைகள் ஏற்ற சொற்களே! ஆனால் அவைகள் சாதிப்பெயர்களல்ல, பட்டப்பெயர்களென்போம்." என அர்த்தனாரிச நாயகர் 1923-ம் ௵ மே௴ 28௳ தமது பத்திரிகை பவனி, 1. காட்சி. 4, பக்கம். 2-ல் தெரிவித்துள்ளார். அப்படியாயின் இவர் அர்த்தனாரிசப்பள்ளி என வழங்கி வராமல், அர்த்தனாரிசப்பிள்ளை, அர்த்தனாரிச நாயகர், அர்த்தனாரிச நாயகவர்மா, அர்த்தனாரிச வர்மாவென மாறிமாறி வழங்கிவந்த தேனோ?

வன்னியர் என்பது குறவர் வேடரைக் குறிப்பதால் சாதிப்பெயராக வைத்துக்கொள்ளக் கூடாதென்கின்றார். பள்ளி என்பதையும் பட்டப் பெயரென்கிறார். அப்படியாயின் அவருக்குரிய சாதிப்பெயர் எதுவோ? இருக்கும் சாதியிலேயே இல்லாமல் தமக்கு இல்லாத சாதிப்பெயரைத் தேடி, இடர்படுகிறார். நன்றாயிருக்கிறது கூத்து, நாலுபேர் கேட்டுச் சிரிக்க.

கிராம பஞ்சாயத்து எலெக்ஷன்.

(ச. வெ. சோமசுந்தர நாடார்.)

திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள கச்சினாவிளை கிராமத்தில் மெட்ராஸ் கவர்ன்மெண்டாரின் 1920 வருஷத்திய 15-வது ஆக்டின்படி "கச்சினாவிளை கிராமப் பஞ்சாயத்" என்ற பெயருடன் பஞ்சாயத் ஸ்தாபித்துக் கொள்வதற்கு ஆர்டர் கிடைத்ததின்படி ஷை பஞ்சாயத்திற்கு ஏழு மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க நாளது 6-3-25 மாலை 3-மணிக்கு ஸ்ரீபொன்னம்பல விநாயகர் கோவில் முன்புறம் மைதானத்தில் தூத்துக்குடி தாலுக் போர்டு டிவிஷன் கௌரவ கிராமப் பஞ்சாயத் நிர்மாணகாரான கனம், க. பி. செல்லைக ஆதித்த நாடாரவர்கள் (பிரிசைடிங் ஆபீஸர்) முன்னிலையில் எலெக்ஷன் நடைபெற்றதில் ஸ்ரீமான்களான கெ. சவிபாண சுந்தர நாடார் ரு. நாருயண நாடார் முத்தையா நாடார் பா. யோசேப்பு நாடார் தா. வெள்ளையா நாடார் சா. இராமலிங்க நாடார் சு. வண்ணமுத்து தேவர் ஆகிய எழுபேரும் மெம்பர்களாகவும் ஸ்ரீமான் தா. வெள்ளையா நாடாரவர்கள் பிரசிடெண்டாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். ஷை கிராம பஞ்சாயத் கிரமமாய் சட்டப்படி ஒழுங்குடன் நடைபெறுமென எதிர்பார்க்கப் படுகிறது. மாவிடு பண்ணை குறுகாட்டூர் கிராமங்களிலிருந்தும் ஷை பஞ்சாயத் ஸ்தாபித்துத் தரும்படி மனுச்செய் திருப்பதுடன் கந்தசாமிபுரம், பள்ளிப்பத்து, ராஜபதி சிறுத்தொண்ட நல்லூர் முதலிய கிராமங்களிலும் ஷை பஞ்சாயத் சபைகள் ஸ்தாபிக்கத் துரிதமுயற்சி நடப்பதாய் தெரிகிறது. ஸ்வராஜ்யத்திற்கு முதற்படியாக காருண்ய கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிற சீர்திருத்த சட்டத்தின்படி எல்லா கிராமங்களிலும் இம் மாதிரியான பஞ்சாயத் சபைகளை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியது அத்யாவசிய மென்பதை ஆங்காங்குள்ள குலாபிமானிகள் அறிந்து முயற்சி செய்வார்களாக. ஷை கிராமபஞ்சாயத் சபைகளை ஸ்தாபித்துக் கொள்ள விரும்புவோர்கள் (தூத்துக்குடி தாலுகா போர்டு டிவிஷன், மகா-௱-௱-ஸ்ரீ கௌரவ கிராமப் பஞ்சாயத் நிர்மாணகாரவர்கள், கச்சினாவிளை, நாசரேத் போஸ்ட்) என்ற விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

புருஷோத்தமன் அல்லது யாதவ அன்றில்.

(143-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ஆதித்தன், அ. குமரகுருபரன்.)

புரு:—அடி! ரங்கநாயகி. நான் கேட்ட கேள்விகட்கு உள்ளதைக் கூறி உனக்குரிய தண்டனையை இலகுவாக்கிக் கொள்கிறாயா, வீணே நின்று புலம்புகிறாயா.

ரங்:—மன்னா! அடியாள்பேரில் தாங்களிவ்வளவு தூரம் சந்தேகிக்க, யான் பூர்வத்தில் என்னப் பாவஞ் செய்தேனோ. வீணே என்னைப் புண்ணாக்காதேயுங்கள். அடியாள் தங்களையன்றி மற்றொருவரை, இச்சித்ததாவது, ஸ்பரிசித்ததாவது கிடையாதென தெய்வ சாக்ஷியாகக் கூறுகின்றேன்.

புரு:—சே! வேசை. சொன்னதைத்தானே திரும்பத் திரும்பச் சொல்லுகிறாய். நீ அவனுக்குப் பந்தியில் ஜாஸ்தியாக நெய்வார்த்ததும், சிற்றுண்டிகள் முடிவானவுடன் திரும்பத் திரும்பக் கொண்டுவைத்ததும் நான் கவனிக்கவில்லையா? அடிக்கடி அவன் பக்கத்திலே நீ நிற்பதும் அவனைக் கண்டவுடன் முகமலர்வதும் எனக்குத் தெரியாதா? நான் தாமதிக்கும்படி வேண்டியும் தங்காது, கேவலம், பெண்பால், நீ சொன்னவுடன் அவன் தங்கிய காரணம் என்ன? அதிகம் பேசாதே. உள்ளதைச் சொல்.

ரங்:—பிராண நாயகா! தாங்களே என்னை சந்திரசேகரனுக்கு இன்முகங் காட்டி, இன்சொல்கூறி, தங்களிலும் பன்மடங் குபசரிக்கும்படி சொன்னீர்கள். அதன் பிரகாரம் செய்தேன். பின்னர் தாங்களே என்னிடம் அவனைத் தங்கும்படி மன்றாடச் சொன்னீர்கள். அவ்வண்ணமே செய்தேன். பலவற்றாலும் தங்கள் கட்டளையின்படி நடந்தேனேயொழிய யான் வேறொன்று மியற்றியதிலேன். கற்புடைய பெண்டிருக்குக் கணவனின் கட்டளையின்படி நடப்பதைத் தவிற வேறு விரதமேது "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்" என நைடதாசிரியர் கூறியிருக்கிறதையே நான் சதா வேதப்பிரமாணமாகக் கொண்டு ஒழுகினேன். அதற்கு இப்போது இந்நிலைமையில் வந்தேன். ஆயினுமென்! நான் என் கணவரின் ஆதீனத்திற்றானே நிற்கிறேன். தாங்கள் என்னை இச்சித்தாலும்சரி, சிக்ஷித்தாலும்சரி, தங்களின் விருப்பு, வெறுப்பு இரண்டையும் நான் சமமாகவே பாவிப்பேன். எனது இதயத்தில், நான் துன்புறும்போதும் இன்புறும்போதும் தாங்களுமவ்வாறு யிருப்பதாய் நினைக்கிறேனேயன்றி வேறன்று. ஆனபடியின் தங்கள் பிரியம்போல் அடியாளை நடத்தலாம். நான் கண்ணகியைப்போல் கற்புக்கரசியாகவே யிருக்கிறேன்.

புரு:—இதேது விபரீதமாயிருக்கிறது. சேவகர்காள்! ரங்கநாயகி சொன்னதையே சொல்லிப் பல்லவி படிக்கிறாள். ஆனபடியின் இவளைத் திரிவிசாரிக்கவேண்டும். உங்களிலிருவர் அதிவேகமாக, நமது குலதேவதையாகிய காளியிடம் எனக்குப் பிரதிநிதியாகச்சென்று இங்கு நடக்கும் விருத்தாந்தங்களைக் கூறி, இதனுண்மைக்குப் பதில் வாங்கிவாருங்கள்.

மந்திரியாரே, ரங்கநாயகியை அரண்மனையிற் போயிருக்கச்சொல்லும் இனி அவளென்கண்களில் விழிக்கக்கூடாது. எனது ஆஸ்தானத்திற்கும் வரக்கூடாது. சேவகர்கள் கொண்டுவரும் பதிலைப்பார்த்தே, இது விசாரிக்கப்படும். (இராஜன் குறிப்பிட்ட இடத்திற்கு ஒவ்வொருவரும் சென்றனர். நாட்கள் மூன்றாகின.)

நான்காம்நாள் காலையாயிற்று 'அரசன் சிம்மாசனத்தி லமர்ந்தான். அரண்மனையில் கற்பழிந்த ரங்கநாயகியை வைத்திருக்க அவனுக்குப் பிரியமில்லை. தேவியிடம் சென்ற காவலரையும் காணவில்லை.' ஓகோ இது பெரும் மோசமாகவே இருக்கும். இராணி கற்பழித்தாள். இப்பதிலைக் கொண்டுவர வருத்தப்பட்டு சேவகர்கள் எங்கேயோ ஓடிவிட்டார்கள். இனி

காத்திருப்பதில் பலன் கிடையாது. வேசையுடன் நாம் இருப்பதைவிடக் கேவலம் வேறொன்றுமில்லை. காத்திருப்பின் ஆகாது. காலம் ஆக ஆகக் காரியங் கெட்டுப்போகும். நினைத்த காரியத்தை உடனே முடித்து விடவேண்டும். கார்த்திகேயரே, உடனே சென்று ரங்கநாயகியை மயிர்ப்பிடியாகப் பிடித்து, சிறைச்சாலையுள் புகுத்தும். மாணிக்கவல்லியை அழைத்து, அவள் பக்கங்களில் ஓடிவிடாதபடி காவலிருக்கச் சொல்லும். இன்றோடு ரங்கம் கெட்டுயிர் போதேற்ற ஓர் பிணமேயொழிய, அவளுக்கும் எனக்கும் யாதொரு சொந்தமுமின்று. அரண்மனை ஊழியரில் எவரேனும் அந்த வேசையை அரசியென மதிக்கலாகாது. கற்பழியுங் குற்றம் பஞ்சமாபாதகங்களின் தலைமையுடையதாதலால், அக்குற்றத்தைச் செய்த இந்த வேசை, வினையோரைக் காட்டிலும் மிகவும் நிஷ்டூரமாக நடத்தப்படவேண்டும். ஆக்ஞைப்பிரகாரம் யாவையும் நடத்தும்.

கார்த்திகேயர்:—அரசே. இளவரசனை ......

புருஷோ:—முட்டாள் யோசனையில்லாப் பயல். இந்த ரங்கம் அவனை எனக்குப் பெற்றனள் என்பது என்ன நிச்சயம்? எனக்கு மனைவியும் வேண்டாம் மதலையும் வேண்டாம். பசுமாடு வாங்கும். ஒருவன் கன்றுயில்லாதபடி போவானோ? சந்திரமதியை வாங்கிய காலகண்டய்யர் லோகிதாசனைத் தகப்பனுடன் விட்டு ஏகுவாரோ? இரண்டாம் மந்திரியாக இருந்தும் சிறிதேனும் யோசனையின்றிக் கேட்கத் துணிந்தாயே. எல்லாரையும் பள்ளிக் கூடத்தில் சேர்ப்பி.

கார்த்—மஹாராஜ். ஆக்ஞைப்பிரகாரம்: (பிரசவகாலத்திலிருந்த ரங்கநாயகியும், இரண்டு வயது குழந்தையும் சிறைபுகுந்தனர்.)

ஐந்தாம் காட்சி, சிறை.

அரண்மனையி லாசவன்னமுண்டு, தட்டின்றித் தாராளத்துடன் வளர்ந்த தாயும் மகனும் சிறைபுகுந்து வாழ்வாராயின், அதிலும் அரசன் இவர்களை அதிக நிஷ்டூரத்துடன் நடத்தக் கட்டளையிட்டிருப்பானாயின், சிறைவாசிகட்கு; காலையில் காபி கொடுப்பதார். 10-மணிக்குப் பலகாரம் நல்குவதுயார்? நடுப்பகலில் நறுநெய் வீசும் அன்னமளிப்பது யார்? மாலையில் மன்றங்களில் வைத்துத் தாகசாந்தி செய்பவர்யார்? அந்திப்போதில் சுந்தரவிளக்கு முன்னர் செந்நெல்சாதம் சிறப்புடன் கொடுப்பவர்யார்? பஞ்சணைமெத்தை யெங்கே! பங்காயெங்கே? மின்சார விசிறிகளெங்கே? கொக்கோக லீலைக்கேற்ப அமைந்த திண்டுகளெங்கே? பூமெத்தைகளெங்கே? மதுரப்பூச் செண்டுகளெங்கே! தனலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி யெங்கே? ஒருவரையுங் காணோம். ஒன்றையுங் காணோம். சிறைபுகுந்தவர்களைக் குறிப்பிட்டுச் சந்திரன் மட்டுமே தனது சோடசகலைகளுடன் பரிதபிக்கின்றானோ? சிரிக்கின்றானோ? அறிகிலேம். சந்திரன் வெளிச்சத்திலே பரவும் மன்மதனின் ஐங்கணைகளை யெங்கே? கரும்புவில்லை யெங்கே? ஐங்கணையும், கரும்புவில்லும், மனதில் ஆனுவறும், கையிற் பொருளும், அகத்தில் இருளும் குடிகொண்டால் தோன்றுமே யன்றி, கடற்கரையாயிருந்தாலென்ன, பூம்பொழிலாகயிருந்தாலென்ன, தென்றல் வீசினுலென்ன, சந்திரபிம்பம் விளங்கினுலென்ன, முன்னிலையில் ஸ்திரீரத்தினங்கள் தோன்றினுலுமென்ன, அலைவ மனதில் வியாகூலம், சதாதுக்கமும், இதயப் பிரகாசமுடையவரிடம் தோன்றுவாம்.

ரங்கநாயகிக்குத்தான் சிறைபுகுந்ததைப் பற்றிச் சிறிதும் வருத்தமிலது. ஏனெனின் அவள் சிறையையும் வீட்டையும் சமமாகவே பாவிக்கும் புத்திப்படைத்தவள். மேலும் தனது நாயகனின் ஆக்ஞையை நிறைவேற்றிய சந்தோஷமோ, அவளுக்கு மனதிருப்தியை யுண்டாயிற்று. ஆனால், ஆடி, ஓடிப்பாடித் திரிந்த சிறுபையனுக்கு அந்த ஆத்மசக்தி யுண்டாகுமா. இரண்டேநாளில் தேகமெலிந்து எலும்புகள் தோன்றின. தாயின்சொற்களை அவன் காது சிறிதும் ஏற்றிலது. மூன்றாம்நாள் காலையில் விழித்துப்பார்க்க, குழந்தை இறந்து கிடந்தது. ஆ! என்செய்வாள். பூரண கர்ப்பவதியாய்; இன்றோ, நாளையோ என்று உலகோர் சொல்லும்

படியிருக்கிற, ரங்கத்திற்கு அடிவயிற்றில் தீப்பிடித்து எரிகிறது. அடே, அப்பா, மைந்தா, பாலா, வா, அப்பா, கண்ணே, ஐயா, ஐயோ பாவியான் பெண்பாலாக ஏன் பிறந்தேன். உலகத்தில் என்னைவிடப் பாவிகள் யாருமுண்டா. 10-மாதகாலமாகச் சுமந்தேனே ஏ கடவுளே! என்பாலனை எழுப்பிவிடாயா? பால்மணம் போகாதா குழந்தையை ஏன் கொண்டுபோக வேண்டும். ஏ இயமா! என்குழந்தை என்ன குற்றஞ் செய்தது. அதர்மஞ் செய்யா யென்று உனக்குத் தர்மனென்று பேர்வந்திருப்பதாகச் சொல்கிறார்களே உலகிலுன்னைவிட அதர்மன் யார். பால்மணம் மாறுப்பாலனைக் கொன்ற பாவி! இனி என்னையும் கொண்டுபோய்விடு. பெண்களுள் பாவியாக யான்பிறந்து கொண்ட கணவனுக்கு மாகாமல், பெற்ற பிள்ளையுடனும் வாழாமல் போனேனே எனறு சிலவார்த்தைகள் கூறுவதற்குள் மூச்செடுக்க முடியாதவளாகி ஸ்மரணையற்றுத் தரையில் விழுந்தாள். தேகமுழுவதும் புழுதியிற் படித்தது.

இச்சங்கதியை மாணிக்கவல்லியா ளரசனுக்குத் தெரியப்படுத்த அரசன் "தீயாரைக்காண்பதுவும் தீதே" என்னும் பிரமாணத்தைக் கொண்டு, சிறைவந்து பாராது, இறந்ததைப் புதைக்கும்படி உத்தரவிட்டான். அக்ஞைப்படி நடந்தது. அன்று இரவில் கிட்டத்தட்ட 11-மணியிருக்கும் சிறையுள் ஐயோ, அப்பா, உம், இம், ஆ, ஊசா என்ற சப்தங்கள் பல கேட்டது. காரணமென்ன. இதை ஆராயப்புகின் இரங்கநாயகி தன் பிரசவவேதனையால் கஷ்டப்படுவதாய்த் தெரிந்தது. உடனே மாணிக்கவல்லியும் இரங்கத்திற்கு வேண்டு முதவிபுரிய 1-மணிக்குக் குழந்தை பிறந்தது. பிறந்தது பெண். இரங்கநாயகிக்குத் தன் நாயகனின் கொடூரங்களை நினைத்துக் கவலை ஓர் புறம், அதற்குமேல் தனது சிறைவாசக் கவலை, அதினும் பெரிதாக மைந்தனிறந்த துக்கம், யாவற்றிற்கு மூடே பிரசவவேதனையும் இப்போது பிள்ளைக்குப் பாலூட்டிப் பேணவேண்டியதுமாக உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போலும் "மருமத்தி லெறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தாற்போலும்" கஷ்டங்கள் தோன்றலாயின. என்ன செய்யலாம். யாவையு மனுபவித்தே தீரவேண்டும். யாரே விதியைவெல்லமுடியும் "ஊழிற் பெருவலியாவுள, மற்றொன்று சூழினும் தான் முகந்துறாஉம்" இரங்கநாயகி இவ்வாறு கஷ்டப்பட்டுவரும் நாளில், புருஷோத்தமனும் காவலரை இன்னும் காணோமே என வெதிர்ப்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்.

குழந்தைபிறந்த 4-ம் நாள் மாணிக்கவல்லி ரங்கத்திடஞ்சென்று 'மன்னி! உலகத்தில் கொடிய விஷமுள்ள பாம்பையும், கோபம், விசனம் நிறைந்தவர்களையும் பரவசப்படுத்தக் கூடியது சங்கீதமாகும். அதுவும் விடர்களுக்கேயன்றிப் பெரியோருக்கல்ல. பெரியோருக்கு யாழ். வீணையிலும் மேலான சங்கீதமொன்றிருக்கிறது. அதாவது அவர்களிடம் மக்கள் வாய்ச்சொல்லாகும். "குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்பது தமிழ்மறை. ஆனபடியின் உனது நாயகன் சினத்தைமாற்றும் சஞ்சீவி ஒன்று கண்டுளேன். அஃதாவது உனக்குப் பிறந்திருக்கும் மகவைக்காட்டி, அவனை அதற்கிரங்கும்படிச் செய்தலாகும்" எனப் பல நீதிகள் கூறி, குழந்தையைக் கேட்டாள். இரங்கம் ஆரம்பத்தில் அரசன் குழந்தைக்கு ஏதேனும் இடையூறு விளைவித்து தாயிடமுள்ள சீற்றத்தைக் குழந்தையிடம் காட்டி விடுவானென அஞ்சினளாயினும், இறுதியில் மாணிக்கத்திற்கு இசையவேண்டியதாயிற்று.

ஆரும் காட்சி, அரண்மனை.

மாணிக்கம் குழந்தையை யெடுத்து மன்னர் முன்வைத்து, மன்னனடந்தவிதம்நீதியென்றும் இரங்கம் கற்பரசியென்றும், அரசனவ்வாறு நடப்பி னுலகினநீதி பெருமென்றும் மழை பொழியாதென்றும் பஞ்சமுண்டாகுமென்றும் பல நீதிபுகட்ட ஆரம்பித்தாள். அடியாள்சொல் லம்பலத்திலேறுமா. அரசன் கோபங்கொண்டு கார்த்திகேயரைக் கூப்பிட்டு அவர் மனைவியாகிய மாணிக்கத்தைத் துரத்தும்படி கட்டளையிட, அவ்வண்ணம் நடக்கவே மாணிக்கவல்லி

குழந்தையை ஆங்கு விடுத்துச் சென்றனள். சென்ற மாணிக்கம் அரசன் குழந்தையின் களங்கமற்ற இன்முகத்தைக் கண்டு களிப்புறுவானென நினைத்து அரசனின் பாதங்களண்டை வைத்து வந்ததாய்க் கூறினாள். ரங்கம் தனது குழந்தைக்கு என்ன ஆபத்து நேறிடுமோ எனத் தேம்பித் தேம்பிக் கொண்டிருந்தாள். இஃதிவ்வாறிருக்க மானமே ஓர் உருவென வந்த புருஷோத்தமன் ரங்கநாயகி சந்ததியை வேறறுத்து விடவேண்டுமென்று, கார்த்திகேயரிடம் அக்குழந்தையை எடுத்து ஓர் கூடையிலடைத்துக் கடலில் விடும்படி ஆக்ஞாபித்தார். கார்த்திகேயர் அவ்வாறே குழந்தைக்குப் பலவித ஆபரணங்களணிவித்து, பேழையிலிருத்திக் கடலில் விட்டுத் திரும்பும் வழியில். துஷ்ட மிருகங்களடர்ந்த வனாந்தரமொன்றில் ஓர் கரடியால் கொல்லப்பட்டார். ஆ மோசம்! அடாதுசெய்பவர் படாதுபடுவர் என்பதற் கிதுவே சிறந்த உதாரணமாகும்.

மறுநாள் காலை 10-மணிக்கு அரண்மனையில் கண்ணீருங் கம்பலையுமாக மாணிக்கவல்லி வந்து "அரசர் ஏறே" சம்ரக்ஷணைக் குறைவாலும் இரு குழந்தைகள் இறந்த சோகத்தாலும் நீர் செய்த நிஷ்டூரத்தாலும் இரங்கநாயகி நாடோறுமெலிந்து இறந்துபோயினளெனக் கூற. அது அரசனுக்குத் திடீரென ஓர் திகிலை உண்டாக்கியபோதும், சிறிது பின்னர் தன்னைப்பிடித்த சனியன் தொலைந்ததாகக் கருதி, கற்பிழந்த மங்கை குழாம் அடியுடன் மாண்டதற்காக வான வுவரியு ளாழ்ந்தான். பின்னரும் தான் இரங்கநாயகியைப் பார்க்கவே கூடாதெனவும் பார்த்தால் மனமிரங்க வேண்டியதெனவும் யோசித்து, ஈமக்கிரியைகட்கு வேண்டிய பணமளித்து, ரங்கநாயகியின் பிரேதத்தைப் புதைத்துவிடும்படி மாணிக்கவல்லியிடம் கட்டளையிட்டான். யாவும் ஒழுங்காய் முடிந்தது.

(தொடரும்.)

விதவா விவாகம்.

—(o)—

ஒரு பெண். அக்கினிசாக்ஷியாய, தேவர்கள் சாக்ஷியாய், பிராமணர் சாக்ஷியாய். பந்துக்கள் சாக்ஷியாய், மித்திரர், மித்திரிகள் சாக்ஷியாய் கலியாணஞ் செய்துக்கொண்ட புருஷனை விதிவசத்தால் இழந்துவிடுவாளே யாயின், அப்படி இழந்த பெண்ணையே விதவை எனவும், கைம்பெண் எனவும், முண்டச்சி எனவும், அமங்கலி எனவும் அழைப்பர். அத்தகைய விதவைகளுக்கு மறு புருஷனைத்தேடி கலியாணஞ் செய்து வைப்பதையே "விதவா விவாகம்" எனப்படும். இந்த விதவா விவாகத்திற்கு தரும சாஸ்திரத்தில் விதிகிடையாது. வேதத்தில் மணவாளன் இறந்தால் பெண்களுக்கு ப்ரம்மசரியம் அல்லது உடன் ஏற்றல் என்னும் இரு வழியைக் காட்டப்பட்டுள்ளது. ப்ரம்மசரியம் என்பது தாம்பூலம், கந்தம், ஆபரணம் முதலியவைகளை யொழித்துப் பிற புருடர்முகம் பாராது தரையிற் படுத்திருத்தலாம். விதவைகள் இவ்விதவிரதம் கொண்டிருக்க வேண்டுமெனவே வேதாகமங்களில் கூறப்பட்டுள்ளன.

வேதம்:—"யதே கஸ்மிந் யூபேத்வே ரஸநே பரிவ்யயதி தஸ்மாதேகோத்வே ஜாயே விந்ததே- யந்நைகம் ரஸநாம் த்வயோர் யூபயோ: பரிவ்யயதி தஸ்மாந்நைகாத்வௌ பதிவிந்ததே" என்பது. இதன் பொருள், "யத்=எக்காரணத்தால், ஏகஸ்மிந்=ஒரு, யூபே=கம்பத்தில், த்வே ரஸநே=இரண்டு கயிறுகளை, பரிவ்யதி=கட்டுகிறார்கள், தஸ்மாத்=அந்தகாரணத்தால், ஏக:=ஒருவன், த்வேஜாயே=இரண்டு மனைவிகளை, விந்ததே = விவாகஞ்செய்து கொள்ளுவான்; யத்=எக்காரணத்தால், ஏகாம்ரஸநாம் = ஒரு கயிற்றை, த்வயோர்யூபயோ:- இரு கம்பங்களில், நபரிவ்யயதி=கட்டுவதில்லை, தஸ்மாத் =அக்காரணத்தால், ஏகா=ஒருத்தி, த்வௌ பதி=இரண்டுபதிகளை, நவிந்ததே=அடைய மாட்டாள்" என்பதாம்.

இதனால் ஒருத்திக்கு இருமணம் அதாவது மறுமணங் கூடாதென்பது புலப்படுகின்றது. ஸ்மிருதிகளும் இவ்விஷயத்தைப் பலவிடங்களில் மறுத்துவருகின்றன.

மநுஸ்மிருதியில்

“காமந்து க்ஷபயேத் தேஹம் புஷ்டமூலபலை ஸ்ஸுபை:- நதுநாமாபிக்ருஹ்ணியாத்ப த்யௌ ப்ரேதே பரஸ்யது” எனவும், “ம்ருதே பர்தரிஸா த்விஸ்த்ரீ ப்ர்மஹசர்யேவ்ய வஸ்திதா ஸ்வர்கம் கச்சத்ய புத்ரா பியதாதெ ப்ர்மஹசாரிண:” எனவும், நௌத்வாஹி கேஷுமந்த்ரேஷுநியோக: கீர்த்யதே க்வசித்-நவிவாஹ விதாவுக்தம் விதவாவேதநம்புந:” எனவுங் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் முதல் சுலோகப் பொருள் “புருடனிறந்தால் பெண்கள் தன் சரீரத்தை மெல்ல மெல்லக் கனிகள் கிழங்காதிகளைப் புசித்து ஒடுக்கிவர வேண்டுமன்றி வேறு புருடன் பெயரை எடுக்கக்கூடாது” என்பதாம். இரண்டாவது சுலோகப்பொருள் “புருடன் இறந்த பிறகு பிரமச்சரிய விரதத்தில் இருக்கும் பதிவிரதா ஸ்திரீ அவசியம் பிரமச்சாரிகள் பெறும் நல்லுலகம் பெறுவாள்” என்பதாம். மூன்றாவது சுலோகப்பொருள் “விவாக விதியில் நியோகமும் விதவா விவாகமும் சொல்லப்படவில்லை” என்பதாம். இவற்றால் விதவா விவாகம் உயர்சாதி இந்துக்களிலிருந்து விலக்கியதென வறியலாம்.

யாஞ்ஞவல்கியரும் “ஸ்க்ருத் ப்ரதியதே கன்யா ஹரம் ஸ்தாம் சோர தண்ட பாகன்” என்றார். இதன் பொருள் “கன்னிகாதானம் செய்வது ஒரு முறையே, இரண்டாம் முறை எவனேனும் பெண்ணைக் கொட்டால் அவனைத் திருடனெனத் தண்டிக்கவேண்டியதே” என்பதாம். பின்னும் அவரே! “ம்ருதே ஜீவ திவா பத்யௌ யாநாந் யமுப கச்சதி, ஸேஹ கீர்த்தி மவாப் னோதி மோததே சோம யாஸஹ” என்றார். (இ-ள்.) “புருடன் இருக்குமளவிலாவது அவனிறந்த பிறகாவது வேறு புருடன் முகம் பார்க்காதமங்கை இம்மையில் நற்புகழ்பெற்று, மறுமையில் உமாதேவியாருடன் கலந்து வாழ்வாள்” என்பதாம், இன்னும் பல மகருஷிகளால் நிந்திக்கப்பட்டதாகும். முற்காலத்தில் மகான்கள், மகருஷிகள், பிராமணர்கள், ராஜாக்கள் முதலிய எவரும் இதை யனுஷ்டித்தாரில்லையாதலால் ஆசாரத்திற்கு இது முற்றிலும் விரோதமே! இவ்வழக்கத்தை தாழ்ந்த சாதியார்களோ அனுஷ்டித்து வந்ததாக “இந்துலா” 36-வது நிபந்தனையின் அபிப்பிராயம்.

“கைம்பெண்களுக்கு நற்றயிலமிடல், நறுமணம் வீசும் மலர்சூடல், ஆபரணந்தரித்தல் கூடாது, தன் புருடன், அவனைப் பெற்றவன், அவன் தகப்பன் இம்மூவர்க்கும் திலோதக தர்ப்பணம் செய்யவேண்டும்” என்பதாதி வசனங்கள் இருக்க கைம்பெண் விவாகம் செய்ய எவ்விதமுடியும்? கைம்பெண்களுக்கு விவாகஞ் செய்வதாயிருந்தால் நற்றயிலமிடாமலிருக்க முடியுமா? நறுமணமலர் சூடாமலிருக்க முடியுமா? ஆபரணம் அணியாமலிருக்க முடியுமா? விதவைகளாயிருப்பினும் சுவிபாலைப்பெண்களல்லவா? அவ்விதம் புதியதாலி கட்டிக்கொளபவனுக்கு எவ்விதம் முதல் புருடனுக்கு திலதர்ப்பணஞ் செய்யமுடியும்? ஒரு பொருளை தானங்கொடுத்த ஒருவனுக்கு. மறுபடியும் அதேபொருளை தானங்கொடுக்க அவனால் முடியுமா? அதேபோல், ஒருவனுக்கு தாரை வார்த்த ஒருபெண்ணை, மறுபடியும் அப்பெண்ணையே இன்னொருவனுக்கு தாரைவார்க்க அவளது தகப்பன், அண்ணன், தம்பி, சுற்றதாருக்கு என்ன பாத்தியமுண்டு? இந்நியாயத்தை முன்னிட்டே யாஞ்ஞவல்கியர் “ஸக்ருத் ப்ரதியதே கன்யா” என்றார். அதாவது “கன்னிகையை தானஞ்செய்வது ஒரேமுறை” என்றார்.

அந்தணர் பந்துக்களெல்லோரையுஞ் சேர்த்து, அவர்கள் முன்னிலையில், அக்கினியையும், ப்ரம்மதேவன், விஷ்ணு முதலிய ஏனைய தேவர்களையும் சாக்ஷிகளாகக் காட்டி “கந்யா சநாஸம் பந்நாம்” என்னும் மந்திரத்தால் தாரையிட்டுக் கொடுத்த பெண்ணை, மறுபடியும் இன்னொருவனுக்கு தாரையிட்டுக்கொடுக்க எவ்வித முடியும்? வேறொருவனுக்கு இவளை மறுமணஞ் செய்வித்தால், அவளது முந்திய புருடனுக்

குச் செய்யவேண்டிய பரலோகக் கிரியைகளை எவர் செய்வார்?

கைம்பெண்கள் அநுசரிக்கவேண்டிய விதிகள்.

(1) நீராடாது உண்டல் கூடாது.
(2) பருவத்தில் இரவு புசித்தல் கூடாது.
(3) தாம்பூலந் தரித்தல் கூடாது.
(4) பழைய உண்டி யருந்தல் கூடாது.
(5) தண்ணீர்ப்பந்தலில் நீரருந்தல் கூடாது.
(6) தலைமயிர் வளர்த்தல் கூடாது.
(7) சந்தனம் பூசுதல் கூடாது.
(8) தீர்த்தயாத்திரை செய்தல் வேண்டும்.
(9) கஸ்தூரி தரித்தல் கூடாது.
(10) புஷ்பந்தரித்தல் கூடாது
(11) வெண்கல பாத்திரத்தில் போஜனஞ் செய்தல் கூடாது.
(12) எச்சில் உபயோகித்தல் கூடாது.
(13) சுறக்காய் சாப்பிடுதல் கூடாது.
(14) கட்டிலில் படுத்தல் கூடாது.
(15) திவசம் முதலியவற்றை விடுதல்கூடாது.
(16) வீண்கதைகளைக் கேட்டல் கூடாது.
(17) நற்புராணங்களைக் கேட்கவேண்டும்.
(18) வெண்வஸ்திரம் உடுத்தல் வேண்டும்.
(19) கழுத்தில் பொன்னுபரணம் அணிதல் கூடாது.
(20) பரபுருடர் முகம் நோக்கக் கூடாது.
(21) பரபுருடருடன் உட்காரல் கூடாது.
(22) சங்கீதங் கேட்டல் கூடாது.
(23) கூத்துப் பார்த்தல் கூடாது.
(24) மனம் போனவாறு ஊரைச் சுற்றுதல் கூடாது.
(25) தகப்பன், பந்துக்களுக் கடங்கல் வேண்டும் என்பதாதி விதிகள் கூறப்பட்டுள்ளன. (பத்திராதிபர்.)

டி. பி. மீனாட்சிசுந்தர கிராமணியார், எம். ஏ; பி. எல், அவர்களுக்கு டீபார்ட்டி.

நமது கிராமணி குலத்துள் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, ஸ்ரீமான். பொன்னுசாமி கிராமணியாரின் குமாரர், ஸ்ரீமான், T. P. மீனாட்சிசுந்தர கிராமணியார் என்பார், எம். ஏ; பி. எல்; (M. A; B. L;) பாஸ் செய்து வக்கில் ஆகியும், சென்னை கார்ப்பரேஷனுக்கு சிந்தாதிரிப்பேட்டை டிவிஷனுக்கு எலக்ஷன் கமிஷனராகியும் இருத்தலின் அவற்றை முன்னிட்டு, நம் கிராமணி குலத்தவர்களால் அவருக்கு, சென்னை பச்சையப்பன் காலேஜ் ஹாலில், 1925ஆு மார்ச்சுமீ 7உ சனிக்கிழமை மாலை 5-மணிக்கு வெகுவிமரிசையாக, பல கனவான்கள் முன்னிலையில, ஸ்ரீமான், சர். பி. தியாகராய செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் டீபார்ட்டி நடத்தப்பட்டு, ஸ்ரீமான், பு. இராஜகோபால் கிராமணியார் அவர்களது பெருமுயற்சியால் சந்தோஷமாக முடிவெய்தியது.

சுபம்! சுபம்!!

"ஏரல். அருணாசல சுவாமியின் அம்மானை" என்ற ஒரு நூல் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. ஸ்ரீஅருணாசல சுவாமியின் பிறப்பு வளர்ப்பு, அவரால் ஏற்பட்ட அற்புத முதலியவைகளை வெகு அருமையாகவும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா ஒன்றாகும். வேண்டியவர்கள் தூத்துக்குடி, கொ. சி. பச்சைய நாடார் அவர்களிடமும்; விருதுப்பட்டி, கூ. மு. அ. சி. சந்த சுவாமி நாடார் அவர்களிடமும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

குலசங்கார மாலை.

இந்நூல் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. பூர்வ பிராமணரின் உற்பத்தியை விளக்கியுள்ளது. இப்புதகம் வேணடியவர்கள்; K. குமரவேல் நெ. 10. சொக்கர்கொத்தன் தெரு, மதுரை என்றெழுதவும். விலை அணா 2.

சந்தா நேயர்கட்கோ ரறிக்கை.

1. கடிதங்கள், மணியார்டர் அனுப்பும்போது தங்கள் முழுவிலாசத்தையும் தெளிவாக எழுதவும். இன்றேல் எமக்கு மிகுந்த சிரமமுண்டாகிறது

2. வியாசங்கள் கடிதத்தின் ஒருபுறம் மட்டுமே வரையப்பட்டிருக்கவேண்டும். பதிற்கடிதம், பிரசுரிக்கப்படாத வியாசங்கள் வேண்டுவோர் தபாற்பில்லை யனுப்பவும்.

3. சிலேர்ன் நண்பர்கள் இக்கடவைநம்மை சிறிது கஷ்டத்திற்குள்ளாக்கி விட்டார்கள். வி. பி. வரின் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

4. ஏராளமான வாழ்த்துப்பாக்கள் வந்து குவிகின்றபடியின், ஒன்றைப் பிரசுரித்து ஏனையோருக்குக்கவலையுண்டாக்காவண்ணம்,அவை பிரசுரிக்கப்படுவதில்லை.

5. குல, மத, ராஜத்துவேஷமான வியாசங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசத்தைக் கூட்டவும்குறைக்கவு மதிபருக் கதிகாரமுண்டு.

6. மித்திரனபிவிருத்தியைக் கருதி உண்மையபிமானத்துடன் சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம்.

7. சில மணியார்டர்கள் பேர் தெளிவாகத் தோன்றாமையால், பத்திரமாகப்பெயரைவைத்திருக்கிறோம். பெயரைத் தெரிவித்துப் பத்திரிக்கை பெற வேண்டுகிறோம்.

பள்ளிகளின் குலவொழுக்கச் சட்டம்.

தேவிசகாயம்.

ம-ா-ா-ஸ்ரீ, காஞ்சிபுரி சென்னைமாநகர் மகாநாட்டு அக்ராசநாதிபர்களாகிய வீரசம்புசிறைமீட்டார் முனிசாமிநாயகரவர்களும்-மா - சிவபாத நாயகரவர்களும் மாஸ்டர் அட்டன்டாண்டு ஆபீச சூப்பர்வைசராகிய வீராசாமிநாயகரவர்களும் வன்னிய ராஜகுலத்திற்கடுத்த பூர்வீக நடை, நொடிபாவனைகளையும் கீர்த்திகளையும் தோன்றாமல் மறைந்துவிடவேண்டி நெடுநாளாய் வஞ்சனை பொறாமைகளைக் கைக்கொண்டபல அன்னிய ஜாதிகளால் இழிவுகூறிவந்த இருளகற்றி அளவிடற்கரிய காம்பீரிய மகா பெருமையையுடைய பள்ளியென்கிற நாமத்தின் கீர்த்திப்பிரதாபங்களை யாவருமெளிதிலுணர உதித்த சூரியனுகிய ஜாதிசங்கிரக சார நூலுற்பத்திக்கைக் காரணராய் அச்சிட்டு வெளியிட்ட உத்தம பல்லவ சம்புகுலோத்தாரணஞ்செய்ப உர்பவித்த-கா - ஆண்டியப்ப நாயகரவாகளும், காஞ்சிபுரம்-தமிழ் முனிஷி கனகசபை நாயகரவர்களும் மைற்ற கனவான்களும் நெடுநாளாய் சிதறிக்கிடக்கும் நமது குலத்துக்குரிய நடைகள் சீர்திருத்தி பழைய மேன்மைகளை அடைந்து, இனி எக்காலமும் மாறாத சுத்தினராய் உலகிற் பிரகாசிக்கக் கொண்ட யெண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு இந்த தமிழ்நாட்டுக்குட்பட்ட வன்னிய ராஜ சுந்ததியோராகிய பள்ளிகளுக்கு கூடலூர் ஜில்லா விழுப்புரம் தாலூக்கா வாலூர் பிரக்காவைச்சார்ந்த சேமங்கலம் கிராமம் மதுரா சேதனப்பட்டென்னும் கிராமத்திற் கதிபராகிய இராமசாமி கவிராஜரின் குமாரரும் மேற்படி மகாசபையின் பிரதானப் பிரசங்கத் தலைவருமாகிய சோமசுந்தர நாயகரவர்களால் நியமிக்கும் கட்டளைகளின் விபரங்கள்.

கிராமம் பெரியதனக்காரர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதிகள்.

1. கிராமத்திற்கு எஜமான்களாக நியமிக்கப்பட்டவர்கள் தங்கள் கிராமத்திலிருக்கும் நம்மினத்தோர்கள் இதனடியில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டளைகளைக் கைவிடாமல் நடத்திவரும்படி கண்டிப்பாய் பிரையாசை யெடுத்துக்கொள்ள வேண்டியதோடு தாங்களும் கட்டளைகளுக்குப் பிசகாமல் நடக்கவேண்டியது. இவ்விஷயத்தில் அஜாக்கிரதையா யிருந்தாலும் மேற்படி கட்டளைகளைமீறி நடந்தாலும் எஜமான்களென்கிறபட்டத்திற்கு அருகாராசார்களென்று அறியவேண்டியது.

2. எஜமான்களாய் நியமிக்கப்பட்டவர்கள்

தங்களுக்கு கீழ்ப்பட்ட குடிகளை பட்ச பிரதி பட்சமில்லாமல் நடுநிலைமையாய் நடத்தி ஒருமையாய் வாழ்ந்து வரவேண்டியது. இதற்கு விரோதமாக நடத்துவதாய் ருசுவாகுமானால் 4-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

3. எந்த நிபந்தனைகளை எவர்கள் மீறிநடக்கிறார்களோ அவர்களை விசாரணை செய்யும்போது இதிற் கையொப்பக்காரர்களில் ஐந்து அல்லது ஏழுபேர்களை வைத்துக்கொண்டு இவர்களில் அதிக தொகையுடையவர்கள் அபிப்பிராயப்படி தீர்மானித்து பிசகின நிபந்தனையின் அடியிற் கண்டிருக்கும் அபராதத்தைக் கண்டிப்பாய் வசூல் செய்யவேண்டியது.

4. குடிகளுக்கும் எஜமான்களுக்கும் ஒரு போதும் விவாதம் வரப்படாது. அப்படி வருமானால் தங்கள் கிராமம் எந்த நாட்டைச் சார்ந்ததோ அந்நாட்டுக்கதிபரால் தங்கள் விவாதத்தைப் பயிசல் செய்துகொள்ள வேண்டியது. அப்போதவரால் நியமிக்கும் அபராதத்திற் குட்படவேண்டியது.

கிராமக்குடிகள் நடக்கவேண்டிய விதிகள்.

5. புருஷர்கள் நித்தியமுங்குளித்து நமது குலதேவியை தியானித்து நெத்தியில் கோபி சந்தன மணிந்துகொள்ள வேண்டியது. இதிற் பிசகினால் 2-அணா அபராதம் விதிக்கப்படும்.

6. பிராமணர் நீங்கலாக நம்மோடு சாப்பிடச் சம்மதியாத வைசிய சூத்திராள் வீட்டிலும் சங்கராசாதியாராகிய இடக்கணக்கன், சாட்டுக்கணக்கன் சிர்கணக்கன் கைகாட்டிக் கணக்கன் முதலியோர் வீட்டிலும், சுபாசுபங்களிலும் வெந்துகாலங்களிலும் தாகம், போஜனம் செய்யலாகாது. கூலிவேலை செய்பவர்களும் படிவாங்கிக் கொள்ளலாமே யல்லாது சாப்பிடலாகாது. இதிற் பிசகினால் 2-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

7. பிராமணர்களுக்கு தாம்பூலமுதலிய மரியாதையை நடத்தியபின் நமது இராஜ குலத்திற்குரிய இரண்டாவது மரியாதையை நடத்த சம்மதியாத அன்னியருடைய சுபாசுபங்களுக்கு போகலாகாது. போகவேண்டிய அவசியம் நேரிடுமானால் அலுவல்களுக்கிருந்து சுமமாய் வந்துவிடவேண்டியது இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

8. நமது வீடுகளில் நடத்தப்படும் சுபாசுபங்களில் முதல் குலத்தோராகிய பிராமணர்களுக்கு தாம்பூல மரியாதையை நடத்திவிட்டு பின் நமது குலாதிபருக்கு நடத்தி பின் வைசியராகிய செட்டிகளுக்கும், அதற்குப்பின் சூத்திராகிய வேளாளருக்கும் அதற்குப்பின் படிப்படியாய் மற்றவர்களுக்கு நடத்தவேண்டியது. இம்முறைப்படி பெற்றுக்கொண்டவர்கள்போக வாங்கச் சம்மதி யில்லாதவர்களுக்கு சமாதானம் சொல்லிக்கொண்டு காலங்கழிக்க வேண்டியதில்லை. இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

9. க்ஷத்திரியர் வேட்டையாடிப் புசித்தால் யாகஞ்செய்த பலனுண்டென்று சொல்லப்படும். நமது குலத்துக்குரிய மனுநீதிப்பிரகாரம் நாம் மிருகவேட்டை, பக்ஷிவேட்டை, ஜலவேட்டை முதலிய வேட்டைகள் ஆடுவதை கைவிடப்படாது அப்படி வேட்டையிற் கிடைத்ததை தானும் தன்பந்துக்களும், இஷ்டர்களும், புசிக்கலாமே யல்லாது ஜீவனநிமித்தியம் விற்பனை செய்யலாகாது. இதிற் பிசகினால் 2-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

10. நமது குலத்தில் விற்கத் தகாததை வித்து ஜீவிப்பதும் செய்யத்தகாததை செய்து ஜீவிப்பதும் கூடாது. இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

கூட்டத்தின் கிரமம்.

11. கூட்டங்கள் சுபாசுபங்கள் சர்க்கார்பாபத்து முதலிய யிடங்களுக்கு போகும்போது சிரத்திலும் மேலிலும் இடையிலும் வஸ்திர யீனமாய்ச் செல்லலாகாது. இதிற் பிசகினால் அரை ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

12. அந்தந்த கிராமங்களில் நடத்தப்படும் மாதக்கூட்டங்களுக்கும் நாட்டாராலும் மாகநாட்டாராலும் பிரசங்கத்தலைவராலும் நியமிக்குங் கூட்டங்களுக்கும் கூட்டம் சேருதற்குறிய இடமும் காலமும் எதுவோ அக்காலத்தில் குறிக்கப்பட்டவர்கள் தடையின்றி ஆஜராகவேண்டியது. அப்படி வருவதற்குத் தடை—

ப்படியானால் தகுந்த காரணம் இருக்கவேண்டும் இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

13. மேற்கண்ட கூட்டங்களுக்கு வரப்பட்டவர்கள் சபையிற் காரணமின்றி பேசலாகாது. வீண் சந்தடிசெய்யலாகாது. சபை கலையுமுன் வீட்டுக்குச் செல்லலாகாது. உபாதை நிமித்தம் வெளியிற் செல்லவேண்டுமானால் சைகையால் சங்கிலிக்கி அறிவித்துச் செல்லவேண்டும். இதிற் பிசகினால் அரைரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

14. மேற்படி கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் போதை செய்து வரப்படாது. இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படுதலோடு கூட்டத்தை விட்டு நீக்கிவிடப்படும்.

15. நம்மினத்தோர்கள் சேரும்படியானின்ற கூட்டங்களில் இதர ஜாதிகளில் யெவ்வகைப்பட்டவர்களும் வரவும் கூடாதென்பதை மேற்படி கூட்டத்தோர்களும் சங்கிலியும் உணர்ந்து கண்ணோட்டமாயிருக்கவேண்டும். இதிற் பிசகினால் சங்கிலிக்கி அரைரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

16. நாட்டார், மகாநாட்டார், பிரசங்கத் தலைவர்களுடைய வருதலைக்கண்ட நம்மினத்தோர்கள் யெழுந்து மரியாதை செய்தலும் மேற்படியார் உத்திரவின்பேரில் உட்கார்ந்து அமரிக்கையாய் சம்பாஷணை செய்யவேண்டியது. இதிற் பிசகினால் கால்ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

ஸ்திரீகளை நடத்தவேண்டிய விதிகள்.

17. நமது குலப்பெண்களை வெடியு முன்னெழுந்து ஸ்நானசந்திசெய்து நெற்றியிற் குங்கும மணிந்துகொண்டபின் வீட்டிலுள்ள வேலைகளைச் செய்யும்படி உத்திரவுசெய்து நடத்திவரவேண்டியது. இதிற் பிசகினால் 2-அணா அபராதம் விதிக்கப்படும்.

18. நமது குலப்பெண்களை புலன்களில் வேலைசெய்யும் தங்கள் எஜமான் முதலிய வேலைக்காரர்களுக்கு கொண்டுபோகும் சாப்பாடு முதலிய உணவுகளை கூடையில் வைத்து வஸ்திரத்தால் மூடிக்கொண்டு போகவும். அப்படிச் செல்லுகையில் வழியில் அற்பஜாதியரோடு நின்று பேசவாவது சமீபமாய் செல்லவாவது கூடாதென்று தெரிவித்து நடத்திவரவேண்டியது. இதிற் பிசகினால் 4-அணா அபராதம் விதிக்கப்படும்.

19. நமது குலப்பெண்களை வேட்டைகளின் நிமித்தியம் குளங்கள், ஏரிகள் முதலிய யிடங்களுக்கு செல்லவிடலாகாது. இதிற் பிசகினால் 1-ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

20. நமது குலப்பெண்களை அன்னிய ஜாதியரிடத்திற் போய் வேலைசெய்யவாவது பண்டங்களை விற்கும்படி தலையிற் செல்லவாவது விடலாகாது. இதிற் பிசகினால் 8-அபராதம் விதிக்கப்படும்.

21. நமது குலப்பெண்களை நித்தியமுங் குளித்து சுத்தமாயிருக்கவேண்டியதோடு தங்கள் பிள்ளைகளையும் குளிக்கச்செய்து சுத்தமான நடையிற் பழக்கும்படி நடத்திவரவேண்டியது. இதிற் பிசகினால் 4-அணா அபராதம் விதிக்கப்படும்.

22. நமது குலப்பெண்களை தர்ப்பாலஷர்களாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவாவது தெருத்திண்ணைகள் மீது பகிரங்கமாய் உட்கார்ந்துக் கொண்டிருக்கவாவது, விடலாகாது. இதிற் பிசகினால் 4-அணா அபராதம் விதிக்கப்படும்.

பிள்ளைகளை நடத்தவேண்டிய விதிகள்.

23. நமது பிள்ளைகளை தங்களுக்கு ஆடுமாடு மேய்க்கவேண்டி மூடர்களாக்க வேண்டுமென் றெண்ணத்தைக்கொண்ட பொறாமையும், வஞ்சனையும் இயற்கையாயுடைய அற்பஜாதியர்கள் பள்ளிக்கூடமென்று வழங்கும் மொழியின் தாற்பரியத்தை அறியாமல் உங்கள் குலத்தோர்கள் வாசிக்கலாகாதென்றும், வாசித்தால் விர்த்தியில்லை யென்றும், வாசித்தப்பிள்ளைகள் இறந்துவிடுகிறார்களென்றும், வாசியாதவர்கள் ஜீவிக்க வில்லையா யென்றும், ஓரெழுத்து இரண்டெழுத்து படிப்பானேயானால் வேலைசெய்து உங்களுக்கு கஞ்சி வார்க்கானென்றும், படித்துக்கொண்டால் வேதத்திற் கலந்து விடு

வானென்றும், பயங்கரப்படுத்தியும் நம்மினத்தோர்கள் வசிக்கும் கிராமங்களிலிருக்கும் உபாத்தியாயர்களைக் கலைத்தும் இதுவரையிற் செய்துவந்த கொடிய மோசவர்த்தைகளை நம்பி மயங்கித் திகைப்பதுபோல் இராமல் கல்வியில்லாததால் யாவரும் வணங்கத்தக்க நமது குலத்துக்கு மூடமும் தரித்திரமும் மியற்கையைப்போல் வந்தடைந்து மேன்மையான நமது பூர்வசுதந்திரங்கள் யாவும் நம்மைவிட்டு நீங்கியிருப்பதால் இன்றுமுதல் நமது வாலிபர்கள் கல்வியிலும், புத்தறிவிலும், போரிலும், பலத்திலும், சிறந்தவர்களாய்த் தேறும்பொருட்டு நம்மால் நியமிக்கும் கல்விகற்கும் உபாயங்களின் ஏற்பாடுகளை கைக்கொண்டு பிள்ளைகளை நமதுகுலக் கல்விகளில் பழக்கும்படி விடவேண்டியது. இதிற் பிசகி நாம் எவ்வளவாக அபராதம் விதிக்க எஜமான்களது யெண்ணமோ அவ்வளவு அபராதம் விதிக்கப்படும்.

போதுவிதிகள்.

24. நமதுகுல ஆசாரப்படி முன்னோர்கள் நடத்திவந்ததாகவும் நடந்து வருவதுமான மருமண விதிப்படி நமது பெண்களை மணம் செய்துக் கொடுக்கிற வழக்கத்தை கைவிடலாகாது.

25. நமது முன்னோர்கள் உலகில் தேவாலய மடாலயங்கள் குருபீடங்கள்கட்டி செய்துவந்த தருமங்கள் வெகுசாய் கிழ்ப்பட்டிருப்பதால் அதுகளுக்கு நியமிக்கும் வரிகளை அட்டியின்றிக் கொடுத்து உச்சவ முதலிய தருமங்களைக் கைக்கொண்டு நமது முன்னோர்களுடைய கீர்த்திக்கி பழுதுவராமல் பிரகாசிக்கச் செய்வது நமது கடமையென்றறிந்து மேற்படி நற்காரியங்களைச் செய்ய யெதிர்நோக்கி யிருக்க வேண்டியது.

26. பிரதி கிராமங்களிலிருக்கும் நமதுகுலத்தோர்கள் தங்களுக்குள்ள ஒரே எஜமானை ஏற்படுத்திக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமே யல்லது இதுவரையில் தங்களிஷ்டப்படி இரண்டு மூன்று நான்கு எஜமான்களாக பிரித்துக்கொண்டு பலவாருப் ஒருவருக்கொருவர் விரோதித்திருப்பதை நீக்கி நமதேற்பாட்டின்படி ஒரே எஜமானுக்கு அடங்கி உத்திரவு சொல்லவேண்டியது.

27. இந்த கட்டுப்பாடுகளுக்குச் சம்மதித்து கையொப்ப மிட்டவர்களை கிராமச் சங்கிலி இரண்டுவேளையும் கட்டுப்பாடுகளுக்கு பிசகாமல் நடந்துவரும்படியாய் மாறுமல் அறிக்கை செய்து வரவேண்டியதோடு கட்டுப்பாட்டின்படி நடவாதவர்களை தங்கள் எசமான்களுக்கு குறிப்பிட்டு விசாரணை செய்து வருவாரும் அபராதத் தொகைகளை தங்கள் நாட்டாரிடத்தில் சேர்ப்பிக்கவேண்டும். அந்த தொகைகளை நம்மால் நியமிக்கப்படும் ஏற்பாடுகளின்றி மற்றவிஷயங்களிற் செலவழிக்கலாகாது.

28. விவாக காலங்களில் பிள்ளைவீட்டுக்காரர் 8-அணாவும் பெண்வீட்டுக்காரர் 4-அணாவும் நாட்டுக்கு முன்னதாகக் கட்டிவிடவேண்டும். இத்தொகை நாட்டாரவர்களுக்குச் சொந்தமாகையால் மகாநாட்டாருக் கிரண்டுபாகமும் விவாகம் நடந்த நாட்டுக்கொருபாகமும் கணக்கு விபரத்துடன் பிரித்து அனுபவித்துக்கொள்ள வேண்டியது.

29. இந்த கட்டளைகளுக்கு கையொப்பமிடச் சம்மதியாதவர்கள் இதற்கிணங்கி கையொப்பமிடும் காலம்வரையில் நமதுகுலத்தோரென்றெண்ணவாவது, நமது நன்மைதீமைகளுக்கு வருகவாவது நாம் அவர்கள் நன்மைதீமைகளுக்குச் செல்லவாவது கூடாது. நமக்கு வேலைசெய்யும் பஞ்சாங்கம், பணிசவன், அம்மட்டன், வண்ணான் முதலிய ஊழியர்கள் அவர்களுக்கு வேலைசெய்யக் கண்டால் உடனே அவர்களை நீக்கி நாம் வேறுவேலைக்காரர்களை வைத்துக்கொள்ள வேண்டியது.

30. இன்னும் சிலதினத்தில் யேற்படுத்தப்படும் ஜாதிபண்டுக்குரிய யேற்பாடுகளின்படி நடந்துகொள்ள சித்தமாயிருக்கவேண்டியது. சில அக்கிரமிகள் நமதுகுலத்தை சீர்திருத்துவதாய் யேற்பட்டு மீசையை சிறப்பிப்பதும் மாம்சம் புசியாமல் சீலமாயிருக்கச் செய்வதுமான அக்கிரமங்களைச் செய்ய இவ்விடம்வந்து மயக்குவார்களாகில் ஒருபோதும் ஏமாறப்படாது;

குடியன் குடிமயக்கம்.

காளிதாசன் எனப் புனைப்பெயர் சூடிய ஒருவர் 1925௵ எப்பிரல்௴ 1உயில் வெளியான பள்ளிப் பத்திரிகை 9-வது பக்கத்தில் எம்மைத் தாக்கி, "மீசையேனெடுக்கவில்லை? முக்காடும் போடவில்லை?" என்னும் தலையங்கத்தைச் சூட்டிய ஒரு அற்ப வியாசம் எழுதியுள்ளார். அது பரிகசிக்கக்கூடிய வியாசமேயன்றி, நூல் சம்பந்தமான வியாசமல்ல. நூல்சம்பந்தமான வியாசமாயிருப்பின் பதில்சொல்ல யாம் பின்வாங்கோம். இப்பொழுது பள்ளிப் பத்திரிகைகளில் காணப்படுவதெல்லாம் வெறியன் படித்து, குடியன் சிறிக்கும் வியாசங்களேயன்றி, வித்துவசபை யேறக்கூடிய வியாசங்களல்ல. நூற்சம்பிரதாயத்திற்குப் புறம்பானவை. அதனால் யாம் பதிலெழுதாது புறக்கணித்தனம். அப்படியிருக்க காளிதாசனென்னும் கூளிநேசன் "மீசை ஏன் எடுக்கவில்லை" என்கிறார். மீசை எடுப்பது யார் யார்? சொந்த பெண்சாதியை அயலானுக்குக் கூட்டிக்கொடுத்து, வாழ்பவன் எடுக்கவேண்டும். அல்லது பெண்சாதியை வாரத்திற்கு விட்டு வாழ்பவன் எடுக்க வேண்டும். அத்தகை யோசனையே பேடியென்றழைப்பர்உலகர். அத்தகைய பேடிகளைக்கண்டு "ஏன் மீசை எடுக்கவில்லை" எனக் கேட்டிருப்பின் பொருத்தமாகும். அதைவிட்டு எம்மைக் கேட்பதால் பயன்யாது? அல்லது வாதத்தில் பின்வாங்கியவனும் மீசையெடுக்க வேண்டும். யாம் எவ்வித வாதத்திலும் பின்வாங்கவில்லையென்பதை பத்திரிகா நேயர்களறிவர். ஆனால் இவர் மயக்கத்தால் மாறாட்டமுறுகின்றார். இது இவரது சாதிப்பழக்கம். கள் மயக்கத்தால் மயங்குவது இவரது சாதிப் பழக்கமென்பதை, இக்காளிதாசரது பெரியோர்கள் நிபந்தனை விதித்துள்ளார்கள். அஃதிது. "மேற்படி கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் போதைசெய்து வரப்படாது. இதிற் பிசகினால் (1) ரூபாய் அபராதம் விதிக்கப்படுதலோடு, கூட்டத்தை விட்டு நீக்கிவிடப்படும்" என்பதே! அவ்விதியையும் கடந்து நமது காளிதாசர் வெளிப்பட்டுவிட்டார். இவ்விதி, அவரது குலவொழுக்கச்சட்டம், 14-வது விதியாகும். அவ்விதியை யனுசரித்து இவரை வித்வசபையிலிருந்து விலக்கவேண்டுமேயன்றி, வேறென் செய்வது.

அர்த்தநாரீசப் பிள்ளை என்பார் சிலநூல்களைக்காட்டி எம்குலத்தை தாழ்ந்த சாதியென ருசுப்படுத்தி விட்டாராம். எந்தெந்த புராணவிதிகாசங்களைக் கொண்டும், சங்கநூற்களைக் கொண்டும் ருசுப்படுத்திவிட்டார்? அப்படியொன்றையுங் காணோமே! சிவகாசி கலகத்தில் நடந்த சில சம்பவங்களைக் குறிப்பித்தார். அதோடு ஆர்க்காட்டு மானியூலைக் காட்டினார். இவ்வாவேயன்றி வேறு எந்த நூலைக்கொண்டு ருசுப்படுத்தி விட்டார். ஒன்றுமில்லையே! கலகம் நேர்ந்தால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இருபக்கமுஞ் சேர்ந்துக்கொள்வர். தாம் சேர்ந்த கட்சியின் எதிரி கட்சிக்காரரின்பேரில் இல்லாது பொல்லாதுகளை யெல்லாம் ஒன்றுபடத் திரட்டி மேலதிகாரிகளுக்கு எழுதுவது சகஜம். அத்தகைய ரிப்போர்ட்டுகளால் உயர்வு தாழ்வு ஏற்பட்டுவிடுமா? என்ன! அவர் மதிமயக்கம். காளிதாசருக்கு அவர்குல கள் வெறியின் வாடையடித்ததுபோலும்.

இனி வடஆர்க்காட்டு மானியூலைக் கவனிப்பாம். அதில் எம்குலத்தை தாழ்ந்தசாதியெனக் கூறி, இப்பள்ளிக் காளிதாசன குலத்தை உயர்ந்த சாதியென கூறியுள்ளதா? இல்லையே! அதை அடுத்த வாரம் அறிவிப்பாம்.

ஷெரிங்துரை அவர்கள் சான்றோரை தாழ்ந்த சாதியென கவனியாமல் கூறியதை, அர்த்தநாரீசப் பள்ளியும் பகுத்தறிவில்லாமல் பறையடித்தார். அதையொரு பொருட்படுத்தி இக்காளிதாசரும் கட்டியழுவுகிறார். அவ்விதம் ஷெரிங்துரை தாழ்த்திக் கூறியதற்குக் காரணம் ஈழுவரையும் சான்றோரோடு ஒன்றுசேர்த்துப் பார்த்ததென்க. ஈழுவர் வேறு, சான்றோர் வேறு என்பதை அத்தேச மானுயூலாலும், உலக வழக்கப்பழக்கத்தாலு மறியலாம். இவ

விதமே தர்ஸ்டன் துரையும் (Palli Idiga:—A name given by Telugu people to Tamil Shanans, whose occupation is, like that of Idigas, toddy-drawing. Vide Thurston's Castes and Tribes of Sontheru India Vol. VI, P. 28.

"ஈடிகப்பள்ளி:—இப்பெயர் தெலுகு ஜனங்களால் தமிழ் சாணருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய தொழில் ஈடிகரைப் போல் மரமேறி கள்ளிறக்குதலாம்.") என்றும் அவரது நூலில் ஈடிகப்பள்ளி என்கின்றார். ஈடிகர் என்பார் தெலுகுதேசத்திலுள்ள கள்விலைஞராவர். அவர்கள் கொப்பு என்னும் கம்மவார் சாதிக்கு மேற்பட்டவர்கள். இவ்வீடிகரது மரமேறுந்தொழிலை பள்ளிகளுஞ் செய்தலால் ஈடிகப் பள்ளி எனப்பட்டனர். அப்பகுதியை முன்னிட்டு கம்மவர்களுக்கு மேற்பட்ட சாதியாராகிய ஈடிகரையும், குறவராகிய பள்ளிகளையும் ஒன்றுசேர்த்துப் பார்ப்பது நியாயமாகுமா? அதைப்போலவே ஈழுவரோடு சான்றாரையும் சேர்த்துப் பார்ப்பது நியாயவிரோதமென காளிதாசர் அறிவாராக. பள்ளிகளில் சிலர் மரமேறுவதால் ஈடிகப்பள்ளி என்பதைப் போல், சான்றாரிலும் சிலர் மரமேறுவதால் ஈழுவரோடு சேர்த்துப் பார்த்தனர். அது பொருந்தாப் பிரமாணமென வறியவும்.

செந்திநாதையரும் சின்னப்புலவரும் புத்தகம் போட்டு முடித்துவிட்டார்களாம். செந்திநாதையர் போட்ட புத்தகத்திற்கு, பதில் செறுப்படி ஏற்பட்டுவிட்டது, இனி சின்னப் புலவர் போட்ட நூலுக்கும் அகப்படும் பதில் என வறிவாராக. (பத்திராதிபர்.)

வடக்கன் குளமும், பூர்வீக நாடார்களும்.

(கி. மு. ம. மரியந்தோணி நாடார்.)

—(o)—

இந்நகரம் சொல்லம் 405-ல் வள்ளியூரில் கோட்டைகட்டி யாண்டுவந்த ஐவராஜாக்கள் என்னும் பாண்டியர்களுக்கும் மைசூர் வட்டகையிலிருந்துவந்த கன்னடிராஜாக்களுக்கும் யுத்தம் நடந்தபோது இந்தபெயர் வகிக்கப்பட்டிருக்கிறது. ஷை நகரிலுள்ளவர்கள் பாண்டியர்களுக்கு சகாயமாயிருந்து கன்னடியர்களுடன் போர் புரிந்தவர்களாகும். அவர்கள் பாண்டியர்களைச் சார்ந்த நாடார்களேயாவர். பின்பு வடக்கன் குளம் பூர்வக்கிறீஸ்த்தியன் பாப்பியூலேஷன் அவர்களின் ரிக்கார்ட்டுகளின்படி 1680. 1695, A. D. ஆகிய வருடங்களில் ரோமான் கத்தோலிக் மார்க்கம் ஸ்திரப்பட்டு நாடார்கள் அம்மதத்திலேயே விருத்தியடைந்து வந்தார்கள். மேற்கூறிய வருடங்களில் உள்ளவர்கள் ஆனந்தநாடார் வகையராக்களாவர்கள் அவரே ஆதியில் வடக்கன்குளம் கிறீஸ்தவர்களுக்கு முதன்மையானவர். அந்நாள்தொட்டு இன்னாள் வரை ஏசுவடியா நாடார் (அண்ணாவி) மரபு தொடங்கி தற்காலம் மேற்படி உபதேசியார் உத்தியோகம் பார்க்கும் பிரேதலிஸ் நாடார் அண்ணாவிவரை பதினொரு (11) தலைமுறையாகிறது. ஆவலே திருவிதாங்கூர் சமஸ்தானத்தை யடுத்த அந்த இடங்களில் அந்நாள்தொட்டு இன்னாள்வரை "நாடார்" எனும் கௌரவப் பட்டத்துடன் வழங்கிவருகின்றனர்.

தற்காலம் பள்ளிக்கூடமாயும் முற்காலம் கோவிலாயுமிருந்த ஓர் கல்மண்டபத்திலுள்ள தூண்களில் "முத்துலாபுரம் சவரிமுத்து நாடான் மகன் மலையப்பனுக்கு மரியநாயகிதுணை'

"முத்துலாபுரம் சவரிமுத்து நாடான் மகன் சுவாமியடியானுக்கு மரியநாயகிதுணை" என வரையப்பட்டிருக்கிறது. சிலாசாசனங்கள் இன்று 240-வருடங்களுக்கு முன்னுள்ளவைகளாம்.

(இன்னும் வரும்.)

ஜோதிடப் பேரகராதி, சிற்பநூற் பொக்கிஷம்.

ம-ா-ா-ஸ்ரீ எஸ். கூடலிங்கம் பிள்ளையவர்களாலியற்றப்பட்ட, "ஜோதிடப் பேரகராதி, சிற்பநூற் பொக்கிஷம்" என்னு மிருபுத்தகங்களை எமது பார்வைக்கு அனுப்பினர். ஜோதிடப்பேரகராதியில் அநேக விஷயங்களை வெளிதிலுணருமாறு கோர்வைப்படுத்தி நல்ல கிளேஸ் கடிதத்தில் அழகாக பதிப்பித்திருக்கிறார். இப்புத்தகம் ஜோதிடம் கற்க விருப்பமுடையவருக்கும், மற்றவர்க்கும் மிக்க பிரயோஜனமாகும். "சிற்பநூல் பொக்கிஷமும்" வீட்டின் அளவு, அருக்கன்றிலை அலிமரம், ஆண்மரம், இராஜயோகம், இன்னராசியில் பிறந்தவருக்கு இன்னபக்கம் வீடு நல்லதென்பது, கதவின் ஓசை, கதவுநிற்கும் லக்ஷணம் மற்றும் அநேக விஷயங்களடங்கி யிருக்கின்றன. இதுவும் ஒவ்வொருவர் வீட்டிலுமிருப்பது பிரயோஜனத்தைத்தரும். "ஜோதிடப் பேரகராதி" விலை 2—4—0. சிற்பநூல் விலை 1—0—0.

எஸ். கூடலிங்கம் பிள்ளை, புத்தகசாலை, மதுரை, என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

குரோதன வருஷத்திய சர்வமுகூர்த்த, ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்.

இப்பஞ்சாங்கம், சுத்தப்பதிப்பில், யாவரும் எளிதில் தெரிந்துக்கொள்ளும் விதமாகவும், மற்ற பஞ்சாங்கங்களைவிட விசேஷக் குறிப்புகளுள்ளதாயும், 64-பக்கங் கொண்டதாயும் உள்ளது. இதன்விலை அணா இரண்டுதான். வேண்டியவர்கள், சென்னை. சௌகார்பேட்டை போஸ்டு, ஆனந்தபோதினி ஆபீஸில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆத்திச்சூடி அதிசய விகடம்.

(மாணிக்கவாசக கிராமணி.)

(விகட விருத்தம்.)

அப்பனே ஒற்றைப்பல்லா
 அரகரா பாதிமூஞ்சி
தப்பிலாச் சிங்கவாயா
 சாமுண்டீ எட்டுத்தோளி
ஒப்பிலா வொருடசன்கை
 உள்ளவா நீங்களெல்லாம்
இப்பொதே என்றனுவில்
 இறங்குவீர் சீக்கிரந்தானே.

சல்லையில்லாக் கல்விமல்கும் இன்தமிழ் பயின்று ஏமாந்த புலவர்களே! அடியில் வரும் ஆதி நீதி வாக்குகட்கு அனுகூலமான விகட நீதிக் கதைகளை ஓதி என்னை மகிழ்விப்பீரா? உம்மால் முடியுமோ? என்னவோ! சும்மா உம்மை நானே மகிழ்விக்கின்றேன்; கேளுங்கள்:

ஆரும் இல்லாத ஆமூரிலே, அநீதிபோதிக்கும் பள்ளிவாத்தி ஒருவர் இருந்தார். ஒருநாள் அதிகாலையில், அவர் தம் பழைய சீடர்களை நாடிப் பயணஞ்செய்தார். போனார், போனார் கடைசியாக வெயில் ஏறிப் பத்து நாழிகையில் முதற் சீடன் முத்தன் வீட்டைச் சேர்ந்தார். முத்தன் ஒரு சித்தன்போல அங்கிருந்து குருவை வரவேற்றுபசரித்துக் குந்தவைத்தான். அப்போது அங்கொரு பிச்சைக்காரன் 'நந்தவனத்திலோர் ஆண்டி, அவன் நாலாறுமாதமாய்க் குயவனைவேண்டிகொண்டுவந்தானொருதோண்டி, கூத்தாடிக்கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி, தானந்தனதந்தனனம்' என்று திருவோடு தட்டிப் பாடிக்கொண்டு வந்தான். அவனைக் கண்ட முத்தன் நீ 'பஞ்சத்தாண்டியா, பரம்பரை ஆண்டியா?' என்று பரிகாசஞ் செய்து அரிசிபிச்சை போடாமல் அதட்டி ஓட்டிவிட்டான். அது கண்ட குரு அநீதிமானாயினும், அப்போது அங்குத் தாம் சென்றிருக்கும் சந்தர்ப்பத்தை

ஆலோசித்து, "ஆஹா! இவன் என்ன அசாத்தியனாயிருக்கிறானே! யதா குரு ததா சிஷ்யா என்றபடி நம்மையுமல்லவோ ஒன்றுங்கொடாமல் ஓட்டிவிடுவான்! இவனுக்குப் புத்தி இப்போதாவது சமயோசிதமாய்ச் சொல்லிப்பார்ப்போம்' என்று எண்ணி, 'அப்பா, முத்தப்பா! உனக்கு நான் ஆத்திச்சூடி சொல்லிக்கொடுத்தபோது ஒவ்வொன்றுக்கும் நீதியும் சொன்னேன். அநீதியும் உரைத்தேன். உன்னைப்போன்ற சரிதிலையில் உள்ளவர்க்கு அநீதி காட்டு. என்னைப்போன்ற குரு, ஆதுலர் (பிச்சைக்காரர்) முதலியவர்களுக்கு நீதி காட்டு.

அறஞ்செய விரும்பு என்பதை நீ ஆத்திச்சூடியில் என்னிடத்திற் படித்தபோது என்ன சொன்னேன். தருமஞ்செய்ய ஆசைப்படு என்றல்லவோ நீதி உரை கூறினேன்" என்றார். அது கேட்ட சிடன் தருமமோ கருமமோ எனக்கொன்றுந் தெரியாது. 'அரம் செய்ய இரும்பு. அரம் என்னும் ஆயுதத்தைச் செய்ய இரும்பு நல்லதாயிருக்கவேண்டும் என்று சொன்னீரே அது ஒன்றுதான் அடியேன் ஞாபகத்தில் இருக்கிறது. இப்போது நீர் வேறு எண்ணித்தான் இங்கு வந்திருக்கிறீர்போலிருக்கிறது. அதெல்லாம் ஒன்றும் முடியாது. போய் வாரும்" என்றான்.

இது என்னடா இவன் குரு, நின்று சிறுநீர் பெய்தால் ஓடிப் பெய்கிறவனாய் விட்டானே!' என்று அங்கிருந்து விர்ரென்றெழுந்து வேறொரு சிடன் வீட்டுக்குச் சென்றார். அங்கு இவரைக்கண்ட அரங்கன் என்னும் அவன், தன் சிரந்தாழ வந்தனஞ்செய்து வாருங்கள் வாருங்கள் என்று வரவழைத்து உயர்ந்த ஆசனத்தில் உட்காருவித்தான். "ஐயரே! அரை நிமிஷத்துக்கொருதரம் அந்தப் பாழும் புகையிலைத் தூளை மூக்கிற் சேற்றுவிட்டால், மூச்சித் திணறும்படி மூக்கடைத்துக் கொள்ளுகிறது. உம்மிடத்தில் நன்மைக் கடைப்பிடி நீர் சொன்னபடி நம்ம கடைப்பொடி நாமே கடையும்பொடி அதாவது நீரே சொந்தத்திற் கடைந்து கொள்ளும் கச்சிப்பொடி கச்சுப்பொடி சொகுசாயிருக்குமல்லவா?, எங்கே கொஞ்சம் எடுத்து என் கையைக் கிள்ளும் போட்டுப்பார்க்கலாம். என்று அவசரமாய்க் கையை நீட்டிச் சிட்டிக்கைப் போட்டுக் காட்டினான். அதுகண்ட குரு அசந்துவிட்டார். இது என்னடா இவன்; குருவுக்கெதிரியாய்க் கூத்தாடப் பார்க்கிறானே!" என்று தம் மனத்தெண்ணி, 'என்னப்பா, ரங்கப்பா! கொஞ்சங்கூட மரியாதையில்லையா? அவ்வளவு பொடிப்பயித்தியமா உனக்கு? குருவென்றும் கூட்டாளியென்றும் கூட எண்ணிப் பார்க்காமல் என்னையே நேரிற் கைந்நீட்டி யாட்டிக் காட்டிப் பொடி கேட்கிறாயே' என்றார்.

"ஆஹா! அப்படியா? நீர் சொன்னதுதானே! ஊக்கமுது கைவிடேல். மூக்கமுது கைவிடேல் = மூக்குஅமுது கைவிடேல் மூக்குக்குத் தேவாமிர்தம்போன்ற புகையிலைத் திருத்தூளை அதாவது மூக்குத்தூளை நீ எப்போதும் கைவிடாதே.

(விசேடவுரை) பொடி இருப்புக்குறைந்தால் எதிரில் குருவிருந்தாலும் அப்பன் அம்மான் ஆர் இருந்தாலும் முறைபாராமல் அவரையே நேரில் கேட்டுச் சிட்டிக்கை வாங்கி உறியலாம். அவர்கள் ஒளித்தாலும் கட்டிப் பிடுங்கித் தடபுடலாய் அவர்களுக்கெதிரிலேயே தொளைக்கொரு சிட்டைக்கையாக இருசிட்டிக்கைகள் எடுத்துக் கண்களில் நீர் கலகலவென்று சொட்டவும் மூக்கில் நீர் முக்கு முதுவென்று சொரியவும் உர் உர்ரென்று உறிஞ்சிவிடலாம்" என்று சொல்லிக்கொண்டே குரு இடுப்பிற் செருகியிருந்த குடுக்கையை வெடுக்கென்று பிடுங்கி 'நீரே மரியாதையாய்க் கொடுத்திருந்தால் ஒரு சிட்டிக்கையோடு போயிருக்கும்; இல்லாதபடியால் இருசிட்டிக்கைக்கு இடம் ஆயிற்று' என்று சொல்லிக்கொண்டே மூக்குத் தொளைக்கொரு சிட்டிக்கையால் இருசிட்டிக்கை யெடுத்து, பன்றி உறுமுவதுபோல உர் உர்ரென்று உறிஞ்சிவிட்டுக் குடுக்கையைக் குருவினிடத்தில் நீட்டினான். குரு குடுக்கை கிடைத்ததே பெரும் புண்ணியம் என்று சிவ்வென்றெழுந்து மூன்றுவது சிடன் முருகன் வீட்டைச் சேர்ந்தார். இவரைக்கண்ட முருகன் அந்த முருகரையே நேரிற் கண்டபடி,

"குருவே வருக தேவே வருக

மருவே வருக மலரே வருக
திருவே வருக தேவே வருக
உருவே வருக உம்பர் வருக
தருவே வருக சரணடைந் தேனே"

என்று சிரமேற் கரங்கூப்பிக் கூத்தாடினபடியே எதிர்கொண் டழைத்துக்கொண்டுபோய் முக்காலிமேல் உட்காருவித்தான்.

அப்போது அங்கவன் நண்பன் நாராயணனென்பவன் கோனேரி தாசரிக்குப் பிச்சை கொடுக்கப் போனான். அதை முருகன் தடுத்தான். கண்டார் குரு; கவலை கொண்டார். 'இன்னொருவன் மற்றொருவனுக்கு ஈவதையே வேண்டாமென்று விலக்கும் இவனா நமக்குக் கொடுப்பான். இவன் கொடுப்பான் என்றல்லவோ இங்கு வந்தோம்! கெடுப்பானாக இருக்கிறானே! இவனுக்கு நீதி ஓதிச் சோதிப்போம் என்று எண்ணி, 'தம்பீ முருகா! ஈவது விலக்கேல் என்பதை மறந்தாயோ' என்றார். 'என்ன சொன்னீர்? ஈவது விலக்கேல்' ஈவது உலக்கே என்றல்லவோ அந்தி கற்றுக்கொடுத்தீர்! நீர் என்னோடு பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டு அப்பாற் போகாமல் அசைவற்று நிற்கிறான் அந்தத் தாசரி. அவன் போனாற் போகட்டும். இல்லையேல் இப்போது அவன் படும்பாட்டை நீர் தப்பாமற்பாரும். இனிநான் அவனுக்கு ஈவது அன்று நீர் எனக்கு அந்தி கற்பித்தபடி உலக்கையாகவே முடியும்' என்று முடித்தான்.

அது கேட்ட குரு விலவிலத்து நடுநடுங்கி, அப்பால் எழுந்து மற்றொரு சீடன் மாசிலாமணியைக் கண்டார். இவரைக் கண்டதும் அவன், தன் பூசையறைக்குள் கும்பிட்டுபோட்டழைத்துக் கொண்டுபோய்க் குந்தவைத்து, கழுத்திலே தாழ்வடங்கள் மனத்திலே காவடங்கள் என்றபடி பிள்ளைபார்க் கெதிரிற் பிரணவ செபஞ்செய்து கண்மூடிக் கைகட்டிச் சப்பளித்துட்கார்ந்து கொண்டிருந்தான.

அப்போது அவ்வீட்டு கடையில் ஒரு பண்டாரம், "ஆதரவாய் அடியவருக் கருள்சுரக்கும் ஐங்கரத்தோன் அன்புகூர்ந்து, மாதவமே என வழைந்துப் புயத்தணைக்கத் திருவுளத்து மகிழுங்கோவே" என்று பாட்டு நீட்டிக் கணங் கணங்கென்று சேமக்கலம் அடித்தான். யாரும் பேசவில்லை. தோளிற் காவடியைச் சொகுசாய் குலுக்கி மணியாட்டி 'பிச்சை வருதா அம்மணீ' என்று பெருங்கூச்சல் போட்டான் பண்டாரம்.

காவடி மணியோசைக் கேட்ட மாசிலாமணி கடுங்கோபங் கொண்டு குருவையுங் கவனியாமல் பூசை வீட்டைவிட்டு நடைக்கோடிவந்து, 'என்னடா பண்டாரம் உன் காவடிமணியோடு கண்டாமணியையுங் குலுக்கி யாட்டி 'பிச்சை வருதா அம்மணீ!' என்று பெண்களை அழைக்கிறாயே! சும்மா மரியாதையாய்ப் போகிறாயா? குள்ளியை அவிழ்த்து விடட்டுமா? சிவபூசை வேளையிற் குரங்கு புகுந்தபடி இங்குத் தினந்தோறும் என் பூசைவேளையில் தவறாமல் வந்து சந்தடிசெய்து போகிறாயே! ஒரு நாளைக்குப் பார்த்தால் உனக்குப் புத்தி வரவில்லையா? இங்கு எப்போதாவது பிச்சைவாங்கியிருக்கிறாயா? ஏன் வருகிறாய்? இனி இந்த வாசல்வழி வராதே! வந்தால், உனக்குச்சரியான புத்திபண்ணி வைப்பேன். குள்ளியும் உன்னைக் குலைத்தபடியே யிருக்கிறது. நாளைக்கு அதை அவிழ்த்துவிட்டு வேடிக்கைப் பார்ப்பேன். இப்போது மன்னித்தேன் ஓடிப்போ' என்று தெருக்கதவடைத்துத் திரும்பி வந்து பூசையில் உட்கார்ந்தான்.

கண்டார் குரு. "இது என்ன இது! இன்று வெட்டப் பூதங்கள் புறப்படுகின்றனவே! முதற் பூதம் முந்திரிப் பூதம் இரண்டாவது அரைக் காணிப் பூதம். மூன்றாவது வீசம் பூதம். நான் காவதாகிய இது கால பூதம். அவைகளுக்குப் புத்தி கூறினபடி இதற்கும் கூறிப்பார்ப்போம். இதுவும் குருவுக்குமிஞ்சி கூத்தாடும் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனாலும் பார்ப்போம்" என்று எண்ணி 'மாசிலாமணி, உன் பூசைக்கு மகிழ்ந்தேன். பூசைவேளையில் வந்த பண்டாரத்தைப் பிச்சையிடாமல் ஓட்டினதற்கு மயங்குகிறேன். என்கதியும் அதேகதிதானோ! அதோகதியோ? ஐயமிட்டுண் என்பதை மறந்தாயே?' என்றார்.

"ஆக்ஷேபனை யென்ன? படுகளத்தில் ஒப்பாரியா? எல்லாம் தங்கள் ஆசிர்வாதந்தான். 'ஐயமிட்டுண்' என்று நீர் கற்றுக்கொடுத்தீர்! ஐயமட்டுண் என்றல்லவோ கற்றுக்கொடுத்தீர்? 'ஐயம்+அட்டு+உண் = பிறர் கொடுக்கும் பிச்சையைச் சமைத்து நன்றாய்ப் புசி. ஐயம்+மட்டு+உண்=அதை அளவாய்ச் சாப்பிடு' என்றல்லவோ போதித்தீர். இப்படிக்கற்ற நான் ஏன் வீணாய் ஐயம் யிட்டு உண்ணவேண்டும்? வரவைப் பார்ப்பதா, செலவைக் கவனித்துச் சீர் செடுவதா? அன்றியும் நீர் எங்களுக்குக் கொன்றைவேந்தன் கற்றுக் கொடுத்தபோது 'கையொத்திருந்தால் ஐயம் இட்டுண்' என்பதை வற்புறுத்திச் சொன்னீரே மறந்தீரா? கை+ஒத்து+இருந்தால்+ஐயம்+இட்டு+உண்= கையில் பணம் சரியாயிருந்தால் பிச்சை போட்டுச் சாப்பிடு என்று சொன்னீர். ஆத்திசூடியில் உள்ள 'ஐயமிட்டுண்' என்று நீர் சொன்னதற்கும் இந்தக் கொன்றைவேந்தனில் உள்ள 'கையொத்திருந்தால் ஐயமிட்டுண்' என்பதற்கும் சம்பந்தம் இருக்கிறதென்றீரே மறந்தீரா? கை=கைப்பொருள் யாருக்குத்தான் சரியாயிருக்கும்? ஐந்து சம்பாதிக்கிறவனும் போதாதென்கிறான்! ஆயிரம் சம்பாதிக்கிறவனும் பற்றாதென்கிறான். பிள்ளை பெறப்பெற ஆசை; பொருள் வரவர ஆசை. யாருக்குத்தான் கை ஒத்திருக்கும்? யாருக்கும் கை ஒத்திருக்கப் போகிறதும் இல்லை. ஐயம் பிச்சையிட்டு உண்ணப்போகிறதும் இல்லை. இத்தனையும் நீரே சொன்னீர். இப்போது நீரே வேறுபேசுகிறீர். போய்வாரும் நமஸ்காரம் என்று குருவைக் கும்பிடுபோட்டு அனுப்பினான். குரு, தாம் தப்பினதே தம்பிரான் புண்ணியமென்று அங்கிருந்து புறப்பட்டுச் சென்று வேறொரு சீடன் வீட்டைச் சேர்ந்தார்.

அவரைக்கண்டதும் வேலாயுதன் என்னும் அவன், அடியற்ற நெடும் பனைபோல் வீழ்ந்து வணங்கி கூடத்திற் குந்தவைத்து, எங்கேயோ வெளியிற்செல்லப் பயணம் புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

அதுகண்டவர், "தம்பி, வேலாயுதம். உங்கப்பா இருந்தபோது, எதையும் சாஸ்திரப்படி செய்து கொண்டிருந்தாரே! நீ யென்னவே அதை யெல்லாம் அடியோடு விட்டு, கோணையெழுத்துப் படித்த கோமாளிகளைப் போல எதையுங் கவனிக்காமல் இஷ்டம்போற் செய்கிறாயே! இன்று நாயிறல்லவா! பயணம் போகலாமா? நீ புறப்படுவதைப் பார்த்தால், நெடுந்தூரம் போவதுபோற் காண்கிறதே! என்றார்.

"சரி! நன்றாய்ச் சொல்லுகிறீர்! வேலியே பயிரை மேய்வதைப்போல, நீர் கற்றுக்கொடுத்ததையே மறுத்துக் கூறுகின்றீரே! உத்தமனுயிரு=உத்தம (னு) நாயிறு உத்தமம்+(நா) ஞாயிறு = ஞாயிற்றுக்கிழமை எதற்கும் நல்லது" என்றல்லவோ போதித்தீர்! அப்போது அப்படிபோதித்து, இப்போது இப்படிபோதிக்கின்றீரே! நீர் போய்வாரும் பிறகு பார்த்துக் கொள்ளலாம். தள்ளாதவர் பாவம்! ஞாபகப் பிசகு. நானும் போய்வருகிறேன்' என்று குருவுக்குமுன்னே வெளியிற் போய்விட்டான்.

பிறகவர், பீதாம்பரம் என்னும் வேறொரு சீடன் வீட்டுக்குச் சென்றார். இவரைக்கண்டவன், தன் தந்தையைக் கண்டபடி, தாவிவந்து தாள்களிற் பணிந்து, "ஐயரே! அடியேனையும் பொருட்படுத்தி வந்தீரே! வரலாமா? வாரும் வந்துவிட்டீர்! என்செய்வது? வந்ததற்கு உட்காரும்" என்று தரையைக்காட்டி, மறுபடியும் ஒரு மணையைக் கொண்டுவந்து பொத்தென்று போட்டுப் பெண்டாட்டியைக் கூப்பிட்டுத் தன்னோடவர்க்கும் ஓரிலை போடச் சொல்லி, 'வேண்டா வெறுப்பா, ஏண்டாகுடிப்பா' என்றபடி வேண்டா வெறுப்பாய் நடுவிலையிற் பிடிசோறும் படிக்குழம்பும் பரிமாறச் செய்தான். குரு அயர்ந்து நின்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். 'இனி நீர் சும்மா நிற்பதிற் குணமில்லை. இலையிற் குந்தும், சாப்பிடும்' என்றான்.

அது கண்ட குரு, 'என்னடா நீ பழம் பீதாம்பரமாயில்லை. புதுப்பீதாம்பரமாய்விட்டாயே! என்னடா என்மேல் கோவம் சொல்லடா பார்ப்போம். என்றார்.

"சொல்றது என்னத்தை, எல்லாம் நீர் கற்

றுக்கொடுத்தது தான் ஆத்திசூடியில் என்ன கற்றுக்கொடுத்தீர். வேண்டி வினைசெயேல் என்பதற்கு என்ன வுரை கூறினீர்? எந்த காரியத்தையும் விருப்பமாய்ச் செய்யாதே; வெறுப்பாய்ச் செய். என்றீரே அதுபோலவே நடந்துகொண்டிருக்கிறேன் குருவார்த்தை தப்பலாமா என்றான்.

"சரி; உன்சோறும் வேண்டாம் சாறும் வேண்டாம் போ" என்று புறப்பட்டார் குரு. அங்கிருந்தவர், வெயிலேறிப் பசியேறியிருந்தாராகையால் ஞெரேலெனத் தம் வீடுபோய்ச் சாப்பிட்டுப் பள்ளிக்குப் போனார். அங்கே அவர் அரிச்சுவடிப் பிள்ளைகளை வரிசையாய் வைத்துக் கற்றுக்கொடுத்து வந்தார். அவர்களில் கோபாலன் என்பவன் கௌ வன்னாவைச் சொல்லாமல், இவர் எத்தனைமுறை திருப்பித் திருப்பிச் சொன்னாலும், சும்மா இருந்தான். அதற்கிவர் கடுங்கோபங்கொண்டு 'ஏன்னடா கோபாலா! கௌ என்று சொல்லத்தெரியாதா? தத்தாவாயனோ நீ? மற்ற எழுத்துக்களை யெல்லாம் தத்தாமற் சொல்லிவந்தாயே! கௌவை மட்டும் சொல்லமாட்டாமல் பித்தனைப்போல் விழிக்கிறாயே என்ன' என்றார்.

"நான் என்ன சொல்வேன். எல்லாம் நீர் சொன்னதுதான். நேற்று எங்களுக்கு நீர் கொன்றைவேந்தன் கற்றுக்கொடுத்தபோது, 'கௌவைச் சொல்லின் எவ்வருக்கும் பகை' என்றீரே! 'கௌவை—கௌ என்னும் எழுத்தைச் சொல்லின்—சொன்னால், எவ்வருக்கும் பகை யாவான்' என்றல்லவோ அதன் அர்த்தம். அதனால்தான் நான் சொல்லவில்லை. நான் சொல்லாததனால்தான் எனக்கு உம்மேல் கோபம் வரவில்லை. நீர் கௌ கௌ என்று இத்தனைமுறை சொன்னதனாலேயே உமக்கு என்மேல் கோபமும் பகையும் வந்து என்னை அடிக்கவந்துவிட்டீர். உம்மைப்போல நானும் அதைச் சொல்லிவிட்டிருந்தால் எனக்கும் உம்மேல் கோபமும் பகையும் வந்து நான் பள்ளிக்கூடத்தை விட்டு இத்தனைநேரம் ஓடிப்போயிருப்பேன். அதனால் அதுதவிர வேறுசொல்லுங்கள்" என்றான்.

"இது என்னடா, இவன் கால்முடனாயிருக்கிறான்! இவனை என்னசெய்வேன். பார்த்தால் பாலகனாயிருக்கிறான். பேசுவது பெரும்பேச்சாயிருக்கிறது. இவன் சொல்வதும் ஒருவாறு சரியான விகடந்தான். அதற்காகச் சகடம் ஏன்" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கவரைத் தேடிக்கொண்டு அவருடைய பழஞ் சிநேகிதர், பரமானந்தர் என்பவர் வந்தார். 'வாருங்கள், வாருங்கள் வந்து உட்காருங்கள்' என்று அவரை வரவேற்றுபசரித் துட்காரச்சொன்னார் வாத்தியார்.

உட்கார்ந்தவர், உபாத்தியாயரை உற்று நோக்கி, 'என்ன ஐயா, வாத்தியாரே! வாடியிருக்கிறீர். முகம் மாறியிருக்கிறதே! சாப்பிட்டீரோ? என்றார். அதற்கவர், சாப்பிட்டேன். எல்லாஞ் செய்தேன். என்னபலன்? இன்றுக் காலையில் என் பழஞ் சீடரைக் காணப்போனேன். அவர்களில் ஒருவனாவது நான் கற்பித்த ஆத்திசூடி நீதியுரையை நினைவில் வைத்து என்னிடத்தில் நடந்து கொள்ளவில்லை. ஒவ்வொருவனும் தனக்கு நான் வேடிக்கை விகடவிநோதமாகப் போதித்திருந்த வீண் உரைகளையே முக்கியமாகக்கொண்டு என்னைப் பரிகாசஞ்செய்து வெருட்டிவிட்டான். இந்தக் காலமும் கலிகாலமாகையால், ஆத்திசூடி யர்த்தமும் நான் வேடிக்கையாய்ச் சொன்னபடியே அனுபவத்தில் இருக்கிறது. எது எப்படியானாலும் அந்த நீதி இப்படியும் இருக்குமா என்று எண்ணி பசியோடு நான் வீடுசேர்ந்து விரைவாய்ப் புசித்து இங்குவந்து இந்தப் புதுச் சீடனைக் கௌ என்று சொல்லடாவென்றால், சொல்லமாட்டேன் என்றான். ஏன்டா என்றால், 'கௌவைச்சொல்லின் எவ்வருக்கும்பகை யென்று அவ்வைச் சொல்லியிருக்கிறாள். அதைச்சொன்னால் நான் தங்களுக்குப் பகையாய்ப் பள்ளிவிட்டுப் போய்விட நேரிடும்' என்று பிடிவாதம் செய்கிறான்" என்றார்.

அதுகேட்ட நண்பர், உமது பழஞ்சீடருக்கு அந்தக்காலத்தில் நீரும் முன்யோசனையின்றி விகடம் சகடம் என்றெண்ணாமல் விகடார்த்தங்களைக் கூறி இப்போது விலகிலத்துப் போனீர். அன்றியும் இந்தப் புதுச்சீடன் புகல்வதும் ஒருவாறு உம்மை வாட்டுகிறது. இவைகளுக்கெல்லாம் மேலே எனக்கொரு சமாதான விகடம் அந்த ஆத்திச்சூடியிலிருந்தே என் நினைவுக்கு வருகிறது. தையல்சொல் கேளேல்—(பெண் வார்த்தையைக் கேளாதே) அவ்வையும் பெண்தானே! ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் அவள் வார்த்தைதானே! அதைக் கேட்டதனால்தான் உமக்கும் உமது பழஞ்சீடர் புதுச்சீடன் முதலியவர்க்கு இத்தனை அல்லல் உண்டாயிற்று" என்று அப்பால் போனார்.

இக்கதைபுத்தகரூபமாதலால் யாரும்பிரசுரிக்கலாகாது.